அறைவு 02 இயம் 25 February 01 - 07, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
# MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## 100 ரூபாய் கேட்கும் உதய கம்மன்பில

13



### முல்லைத்தீவு–கொக்கிளாய் மீனவர்களுக்குத் தடையில்லை

# கட்டுவலை நமக்கு மட்டும் தடையா?



கட்டுவலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்க புல்மோட்டை மீனவர்களுக்கு மட்டும் தடைவிதிக்கும் கடற்றொழில் நீரியல் வளத்துறையினர் கொக்கிளாய் மற்றும் முல்லைத்தீவிலிருந்து வரும் மீனவர்களுக்கு தடைகள் எதனையும் விதிப்பதில்லை. இந்தப் பாகுபாடு ஏன்? என புல்மோட்டைச் சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறுகடற்றொழிலாளர்கள் கோசமிட்டுள்ளனர்.

கட்டுவலையினைப் பயன்படுத்தி கொக்குளாய் களப்பு கடல் பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அரசின் நீர்வள துறையினர் கடந்த 3 மாதகாலமாக தடை விதித்தமையை கண்டித்து திருகோணமலை, புல்மோட்டை களப்பு மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கடந்த புதன்கிழமை (29) நண்பகல் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து 30ம் திகதி இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து புல்மோட்டை வர்த்தகர் சங்கம் முழுக்கடையடைப்பை மேற்கொண்டது. மேலும் பிரச்சனைகளுக்கு தீர்வு எட்டபடாமையால் 31ம் திகதி பாடசாலைகளையும் பூட்டி ஆர்ாப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அங்கிருந்து எமது செய்தியாளர் தெரிவித்தார்.

"ஜீவனோபாயத்தை கொண்டு நடத்தும் கட்டுவலை தொழிலை பெற்று தரவேண்டும். அவ்வாறு.... 13

## மட்டக்களப்பில் மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

### மாகாணக் கல்விப் பணிப்பாளர்



(வரதன்)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதற்கு பிரதான காரணம், மாணவர்களை சித்தியடையச் செய்யாமல் தடுத்துக்கொண்டு செல்வதேயாகும்" என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.நிசாம் தெரிவித்தார் .

"கல்விக் கொள்கையில் ....... 13

## சம்பூரில் கைகோர்க்கும் இந்தியாவும் ஜப்பானும்



சம்பூர் அனல் மின் நிலையப் பணிகளை முன்னெடுப்பதற்கு இந்தியாவிற்குத் துணை நிற்கப்போவதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

தெற்காசியாவின் வலுத்துறையில் விருத்தியடைவதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்பட ஜப்பான் விரும்புவதை அந் நாட்டின் பிரதமர் இந்தியப் பிரதமருக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தியாவிற்குப் பயணித்திருந்த ஜப்பானியப் பிரதமர் திருகொணமலையில் உருவாக்கப்படவுள்ள அனல் மின்நிலைய முதலீட்டில் இந்தியாவுடன் தமது நாடும் பங்கேற்கும் என தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் இணைந்து இலங்கையின்......... 13

### முக்கிய விடயங்களைப் பேச முனையும் போது கிழக்கு மாகாண சபை காலவரையறையின்றி ஒத்திவைப்பு

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு "தர்ணா"

"முக்கிய விடயங்களை விவாதிக்க முனையும் போது தவிசாளர் தன்னிச்சையாக மாகாணசபையை ஒத்திவைக்கின்றார்'' இந்த எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்து... 13



## செயற்பாட்டு அபிவிருத்தித் திட்டத் தயாரிப்பில் தமிழ்க் கட்சியினர் புறக்கணிப்பு

திருகோணமலை மாவட்ட செயற்பாட்டு அபிவிருத்தித் திட்டத் தயாரிப்பில் ஆளங்கட்சி அங்கத்தவர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அதிகாரங்களில் பெரும்பான்மையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ள போதும் அவர்களுக்கு தமது பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக முன்னுரிமை 13

## தேசிய கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம்

2013ன் பொதுநலவாய மாநாடு தொடர்பாக தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் செல்வி. பானுஜா ரவிதாஸ் அவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளார். தி. புனித மரியாள் கல்லூரியின் பழைய மாணவியான இவருக்கு ஐம்பது ஆயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது

MIC Computers
It's Your Way
English Course
* Spoken English * Grammer
* Team Work * Listening & Reading இப் பாடநெறி முடிவில்
( IEMS) London University இணைந்த சான்றிதழ் வழப்படுவதுடன்
உயர் கல்வி வெளிநாட்டில் தொடர்வதற்கான அனுமதியும் பெற்றுத் தரப்படும்
(UK, Singapoor ,Canada)
Computer Courses ,Accounting courses
* IT,ICT,GIT * Office Management * NAAT * AAT
* Graphic Designing * Accounting Package * CIMA
* Web Designing * Hardware Networking * ACCA
* Kids course
கணனி திருத்த வேலைகள் உதிரிப்பாகங்கள் போன்றவை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
MIC Computers
No 111/ 1,1st Floor,2nd Floor,Vidyalayam Road,Trinco (31000)
T.P - 026-4031011026-4031011,077-5337722,077-4656770
E-mail -miccom111@gmail.com
Branch Ward No-2 ,Nilaveli

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com
075-4252042

## ஒரு நாடு - இரு தேசம்

வடக்கு கிழக்கு வாழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைக் கூட அரசு கவனத்திற் கொள்ளவில்லை என்பதையே தமிழரசுக் கட்சியின் தீர்மானங்கள் தெளிவாகச் சுட்டி நிற்கின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களில் தமிழர்களே பெரும் இக்கட்டான வாழ்நிலையை நாளாந்தம் சந்தித்து வருகின்றார்கள். எனினும் தமிழ் பேசும் முஸ்லிம்களும் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

ஆனால் தமிழர்களின் பிரச்சனைகளுடன் ஒப்பிடும் போது முஸ்லிம்களின் வாழ்நிலை வடக்கு கிழக்கில் சற்று தேறிய நிலையாகவே உள்ளது.

அதற்காக அவர்கள் கடைப்பிடிக்கும் அரசியல் தந்திரோபாயம் சற்று வித்தியாசமானது.

ஆனால் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடு அன்றில் இருந்து இன்று வரை தெளிவானதாகவே இருக்கின்றது. அத் தெளிவினால்தான் வடக்கிலும் கிழக்கிலும் பெருமளவு உள்ளூராட்சி, மாகாண சபை மற்றும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களை மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கி வந்துள்ளனர்.

எனவே வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளை பேசுவதற்கும் அதனை முன்னெடுப்பதற்கும் அவற்றிற்கும் மேலாக வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்களை சனநாயகப் பண்போடு ஆள்வதற்கும் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தேர்ந்துள்ளார்கள்.

இந் நிலையினை சரியாகப் புரிந்து கொள்ள அரசு ஏனோ விரும்பவில்லை. அரசின் நினைப்பின் படி நிவாரணங்களும், அபிவிருத்திப் போர்வைகளும், அழகிகளின் குத்தாட்டங்களும், அரசுடன் ஒட்டிவாழும் தமிழ்க்கட்சிகளின் அறிக்கைகளும் வடக்குக் கிழக்கில் உள்ள மக்களின் மனங்களை மாற்றிவிடும் என்றே உள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் அரசுடன் ஒட்டியுள்ள கட்சியொன்றின் பாராளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சியில் நிவாரணப் பொருட்களை வழங்கினார். அதன் போது நிவாரணம் பெறச் சென்ற ஒருவர் கூறியது "தாரதெல்லாம் வாங்குவம், ஆனால் புள்ளடி மட்டும் வீட்டுக்குத்தான்" என முனுமுனுத்தார்.

இதுதான் தமிழர்களின் மனநிலை. இதனைச் சரியாகப் புரிந்து கொண்டு அரசு உரிய தமிழக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தால் மட்டுமே உண்மையான நல்லிணக்கத்தை அடைய முடியும்.

பிரதான தமிழ்க்கட்சியின் தலைவர் தெளிவாக ஒரு விடயத்தைச் சொல்லிவிட்டார். "ஒரு நாடு - இரு தேசம்" என்பதே அது. அதனை உறுதிப்படுத்த அவர் பொதுக்கூட்டமொன்றில் சிங்கக் கொடியை ஏந்தி சைகை மூலமும் வெளிப்படுத்தி விட்டார்.

ஆனால் அதனைப் புரிந்து கொள்ள மறுக்கும் அரசும் அதன் சில் கூட்டு இனவாதக் கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்றும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை புனர்வாழவிற்கு உட்படுத்த வேண்டும் எனக் கோசமிட்டுள்ளன. அதனையும் தாண்டி மற்றொரு பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க வின் உறுப்பினர் ஒருவர் "வடமாகாண சபை அரசியலமைப்பிற்கு முரணாகச் செயற்பட்டு விட்டது- அது சர்வதேச விசாரணையைக் கோரிவிட்டது" எனக் குரலெழுப்பியுள்ளார்.

வட மாகாண சபையின் முதலமைச்சர் தாம் மக்களின் உணர்வுகளையே பிரதிபலித்தோம் என இக் குரல்களுக்கு பதிலாகத் தெரிவித்திருப்பதை இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும்.

அதாவது வடக்கு வாழ் மக்கள் சர்வதேச விசாரணையொன்றை வேண்டி நிற்கின்றார்கள். அவர்களது எண்ணத்தையே அவர்களின் அரசியல் தலைவர்களாகிய நாங்கள் வெளிப்படுத்தி யிருக்கின்றோம் என்பதே அது.

இங்கு தான் முக்கியமான விடயமொன்று தொக்கி நிற்கின்றது. ஒரு நாட்டின் மக்களில் இன அடிப்படையில் பிரிந்துள்ள இரு சாராரில் தெற்கு மக்கள் சுதந்திர விசாரணை வேண்டாம் என்க கோரும் போது வடக்கு மக்கள் சுதந்திர விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதன் அடிப்படையைக் கூர்ந்து பார்த்தால் "ஒரு நாடு - இரு தேசம்" என்ற விடயம் உட்கிடையாக ஓடியிருப்பதை புரிந்துகொள்ள முடியும்.

அதனைப் புரிந்து கொண்டால் அயலவன் எங்கள் வீட்டுச் சண்டைக்குள் கழுத்தை நீட்டுவானா? புரிந்து கொள்ளாத வரைக்கும் ஜெனீவாவிற்கு படையெடுக்கத்தான் வேண்டும்.

(ஆ-ர்)

# அலரிமாளிகையின் தோல்வியே எம்மை அயலுலகு நோக்கி நகர்த்துகின்றது - அரியம் எம்.பி

தமிழரின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்மைப்பு ஜெனீவா நோக்கிச் செல்வது கேவலமான செயல் என நாமல் ராசபக்ச எம்.பி. தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் முகதாக அரிய நேந்திரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஜெனீவாவிற்குச் சென்று தீர்வைப் பெறுவது கேவலமான செயல்தான் ஆனால். அலரி மாளிகை கடந்த தசாப்த காலங்களில் எம்மை ஏமாற்றியே வந்திருக்கின்றது என்பதை நாமல் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லைதான். ஏனெனில் அவர் பிறக்கும் முன்பிருந்தே தந்தை செல்வா தொடக்கம் எமது தலைவர்கள் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெறுவதற்காக அலரி மாளிகைக்கு சென்று வந்திருக்கிறார்கள். பல ஒப்பந்தங்களை செய்திருக்கிறார்கள். சத்தியாக் கிரகங்களையும் உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தினார்கள்.

இந்த வரலாறுகளையும் உண்மைகளையும் நாமல் ராசபக்ச தனது தாத்தாவிடம் கேட்டால் தான் தெரிந்து கொள்ள முடியும். அரசியலுக்குப் புதியவரான அவரால் இந்த சின்ன வயதில் தமிழர்கள் நடாத்திய போராட்டங்களையும் இடர்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை.

ஜெனிவா சர்வதேசம் என்ற விடயங்கள் தெரிவதற்கு முன்னம் எமது தந்தை செல்வா தொட்டு ஏனைய தலைவர்கள் வரை உள்நாட்டில் பேச்சுவார்த்தைகள் மூலமும் டட்லி-செல்வா, பண்டா–செல்வா, மாவட்ட சபை, மாகாண சபை என்ற பல்வேறு ஜனநாயகப் பாதைகளினூடாக தமிழ் மக்களுக்கான தீர்வையும் சுயாட்சியையும் பெறுவதற்காக போராடி முடியாத பட்சத்திலேயே சர்வதேசத்தையும் ஜெனிவாவையும் நாட வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதை நாமல் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் பதிலுரைத்துள்ளார் அவர். (கி.வா)

## மட்டு வைத்திய சாலையின் இரண்டாம் கட்ட கட்டுமானத்திற்கு மந்திரிசபை அனுமதி

மட்டக்களப்பு வைத்திய சாலையில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் புற்றுநோய்ப் பிரிவு விடுதிக்கான இரண்டாம் கட்ட கட்டுமான நடவடிக் கையை முன்னெடுக்கும் அனுமதியை மந்திரிசபை வழங்கியுள்ளது.

கடந்த 23ம் திகதி கூடிய மந்திரிசபையின் முன் சுகாதார அமைச்சரால் முன்வைக்கப் பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மந்திரிசபை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

ஏற்கனவே இக் கட்டுமானப் பணிகளின் முதலாம் கட்டம் நடைபெற்றுவருகின்றது. அதனை அரசின் எந்திரவியல் முகவராண்மை நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

அந் நிறுவனத்திடமே இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகளையும் ஒப்படைப் பதையும் மந்திரிசபை ஏற்றுக் கொண்டுள்ளது.

## அமரர் நா.தம்பிராசாவின் அஞ்சலிக் கூட்டம்



வரலாற்று ஆய் வாளரும் முன்னால் சாம்பல்தீவு கிராம சபைத் தலைவருமான அமரர் நாகமணி தம்பிராஜா அவர்கள் அமரத்துவம் அடைந்து ஓராண்டு நினைவை யொட்டி எதிர்வரும் 05.02.2014 புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு உப்புவெளி பிரதேசசபைக்குட்பட்ட சாம்பல்தீவு கிராம உப அலுவலக முன்றலில் நினைவு அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

அக் கூட்டத்திற்கு அன்னாரது நண்பர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

# அம்பாறையில் இருந்து மட்டுக்கு நீர் ஆனால் கிளியில் இருந்து யாழிற்கு நீர் கிடைக்காது



மட்டக்களப்பு எதிர்கொணடுள்ள குடி நீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அம்பாறை மாவட்டத்தில் இருந்து தண்ணீர் வினியோகம் செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ள பாரிய திட்டத்திற்கு அம்பாறை வாழ் முஸ்லிம்களோ அல்லது சிங்களவரோ எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

ஆனால் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழருக்கு குடிநீரை கிளிநொச்சியில் இருந்து வழங்குவதற்கு கிளிநொச்சித் தமிழர்கள் எதிர்க்கின்றார்கள் எனப் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முரளீதரன் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்ய முடியாது என மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நொச்சிமுனை கிராமத்திலுள்ள மகளிர் செயற்பாட்டு அமைப்புக்கு சமையல் உபகரணங்களை வழங்கி வைக்கும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களித்து எந்தவொரு பிரயோசனத்தையும் தமிழ் மக்கள் அடையவில்லை. கிளிநொச்சியிலுள்ள இரணைக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்.

இரணைமடு குளத்தை அபிவிருத்தி செய்து அதிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் கொண்டு போவதை விரும்பாத தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரின் எதிர்ப்பு நடவடிக்கையானது ஒற்றுமையின்மையைக் காட்டுகின்றது.

வட மாகாணத்தைப் பற்றி நான் நன்கு தெரிந்தவன் என்ற வகையில் இந்த இரணைமடு குளத்து த்ண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணத்தில் பல கிணறுகள் உப்பாகிவிடும். இதனால் அந்த மக்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் போய்விடும்.

தமிழ் மக்களுக்கு தண்ணீர் கொடுப்பதையே தமிழ் தேசியக்கூட்டமைப்பு விரும்பாத நிலையை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எதிர்ப்பு தெரிவிப்பதிலிருந்து விளங்கிக்கொள்ள முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இன்று உன்னிச்சை குளத்திலிருந்து தண்ணீர் கொடுப்பதுபோல அம்பாறை மாவட்டத்தின் கொண்டவெட்டுவான் குளத்தினையும் அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தின் இன்னும் சில பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நீங்களும் எழுதலாம்"
### மாணவர்களுக்கான கவிதைப் போட்டி

திருகோணமலை "நீங்களும் எழுதலாம்" கவிதைச் சஞ்சிகையின் வாசகர் வட்டம் அகில இலங்கை ரீதியில் கவிதைப் போட்டி ஒன்றை நடத்தவிருக்கின்றது. போட்டிக்கான விதிமுறைகள் வருமாறு:

பாடசாலைகள் தரம் 11 தொடக்கம் 13 வரையிலான மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம். விண்ணப்பப்படிவங்கள் அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

01.போட்டி குறிப்பிட்ட இடத்தில் நடத்தப்படும். விடயத்தலைப்புக்கள் அந்த இடத்திலேயே வழங்கப்படும்.

02.வெற்றிபெற்ற போட்டியாளர் முதல் மூவருக்கு பணப்பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், ஏனைய 15 இடங்களைப் பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

03.போட்டி நடைபெறும் இடமும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்.

04.போட்டிக்கான இறுதி விண்ணப்பத் திகதி 15.02.2014.

கீழே காட்டப்பட்டுள்ள விண்ணப் படிவத்தைத் தயாரித்து அனுப்ப வேண்டிய முகவரி: எஸ்.ஆர். தனபாலசிங்கம், ஆசிரியர், "நீங்களும் எழுதலாம்", இல. 103/1, திருமால் வீதி, திருகோணமலை. 0778812912.

விண்ணப்பப்படிவம்:

பெயர் (முதலெழுத்துக்களுடன்)
பிறந்த திகதி
தரம்
பாடசாலை
சொந்த முகவரி
தொ.பே
கையொப்பம்

……………………
பாடசாலை அதிபரின்
கையொப்பமும்
பதவி இலச்சினையும்
திகதி :……………………

# முஸ்லிம்களின் கொலை தொடர்பில் முரளீதரன், சந்திரகாந்தனிடம் விசாரணை செய்க! - காத்தான்குடி நகரசபை தீர்மானம்

காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு, பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரிடமும் விசாரணை நடத்த வேண்டும் என்று நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம், காத்தான்குடி நகரசபையில் பிரேரணையொன்றை முன்வைத்துள்ளது.

இந்த பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய குறித்த இயக்கத்தின் உறுப்பினர் அஸ்ஸெய்க் ஏ.எல்.ஏ.எம்.சபில் நழீமி, "1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு குருக்கல் மடத்தில் வைத்து காத்தான்குடி முஸ்லிம்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டது மற்றும் 2004ஆம் ஆண்டு பேத்தாளையில் வைத்து காங்கேயனோடையைச் சேர்ந்த இரு முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பில் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரிடம் விசாணை நடத்தப்பட வேண்டும்" என்றார்.

குறித்த இயக்கத்தினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளானவை,

- கடத்தப்பட்டோர் புதைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் இடங்களை அடையாளங்கண்டு அவைகளைத் தோண்டுதல்.
- கடத்தப்பட்டு கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளவர்களின் எலும்புக்கூடுகளை அடையாளங்கண்டு அவர்களுக்கான மரணச்சடங்குகளை உரிய சமய ஆசாரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளல்.
- அவ்வாறு கடத்திக் கொல்லப்பட்டோர் மற்றும் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு உரிய நட்ட ஈடுகளை வழங்குதல்.
- மேற்படி கடத்தல், கொள்ளைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படுவோரினை அடையாளங்கண்டு விசாரணைக்கு உட்படுத்தவும், உரிய தண்டனைகளை வழங்கவும் கோருதல். என்பனவாகும்



இதேவேளை, "பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகிய இருவரையும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை செய்ய வேண்டுமெனவும் நான் கேட்டுக் கொள்கின்றேன்" என தெரிவித்த சபில் நழீமி, இவ்விடயம் தொடர்பாகக் காத்தான்குடி நகர சபையின் நல்லாட்சிக்கான மக்கள் இயக்க சுயேட்சைக்குழு உறுப்பினர்களான ஏ.எல்.எம். சபீல், எம்.எச்.ஏ.நசீர் ஆகியோர் கையொப்பமிட்ட பிரேரணையையும் சபைக்கு சமர்ப்பித்தார்.

பின்னர் கருத்துத் தெரிவித்த காத்தான்குடி நகர சபை தலைவர் எஸ்.எச்.அஸ்பர் ஏற்கனவே இந்த விவகாரம் மேற் கொள்ளப்பட்டு வரும் நிலையில் அரசியல் இலாபத்திற்காக இந்த பிரேரணை இவர்கள் சமர்பித்ததாகவும் இந்த வியடமாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் நடவடிக்கை எடுத்து வருவதால் அவருக்கு இதற்கான ஒத்துழைப்பினை காத்தான்குடி நகர சபை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இவ் விவகாரம் தொடர்பில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்க சுயேட்சைக்குழு காத்தான்குடி நகர சபை உறுப்பினர்களுக்கும் ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்குமிடையில் வாக்குவாதமும் கருத்துப் பறிமாறல்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நெல் தின்னும் யானைகள் சுட்டுக் கொலை



நெல்வயலை நாசமாக்கும் யானையொன்றைச் சுட்டுக் கொன்ற சந்தேகத்தில் கட்டுத் துவக்குடன் ஒருவர் கைதாகியுள்ளார்.

கடந்த புதன் கிழமை அதிகாலை வாகரை தோணிதாண்ட மடு வயல் பிரதேசத்தில் துப்பாக்கி சூட்டுக் காயத்துடன் யானை ஒன்று இறந்து கிடப்பதாக காவல்துறைக்குக் கிடைத்த முறைப்பாட்டினையடுத்து அவ்விடத்திற்குச் சென்ற காவல்துறையினர் விசாரணைகளின் பின்னர் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளனர்.

குறிகிய காலத்துக்குள் இப் பிரதேசத்தில் இரண்டாவது யானை கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வணக்கத்தலங்களுக்கு அரச காணிகள்

திருகோணமலையயில் கணேசபுரம், ஜின்னாநகர், இழுப்பைக்குளம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள வணக்கத்தலங்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்ட்டுள்ளது.

நாகம்மா ஆலயம், உரொமன் கத்தோலிக்க ஆலயம் மற்றும் மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாயல் ஆகியவற்றுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு அரச காணிகளை வழங்குமாறு உரிய ஆலயங்களின் பரிபாலன சபைகள் பிரதேசச் செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன. அவ் வேண்டுகோள்களைப் பரிந்துரைகளுக்காக சமய, கலாசார விவகாரத் திணைக்களத்திற்கு அனுப்பி கிடைக்கப்பெறும் பரிந்துரைகளை தமக்கு முன்மொழியுமாறு பிரதேசச் செயலாளரை திருமலைமாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார்.

அதற்கமைய பிரதேசச் செயலாளரினால் வேண்டுகோள்கள் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயங்கள் மூன்றும் அரச காணிகளில் பல வருடங்களாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(பா.உ)

## அரச ஓய்வூதிய சங்கத்தின் அதிஸ்ட லாபச் சீட்டிழுப்பு

திருகோணமலை மாவட்ட அரசாங்க ஓய்வூதிய சங்கத்தின் அதிஜ்ட லாபச் சீட்டிழுப்பு கடந்த 25ம் திகதி சங்கத்தின் தலைவர் திரு.சோ.கயிலாயநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது. வெற்றியாளர்களாக 1ம் பரிசு திரு.சிறீபாஸ்கரன், 2ம் பரிசு திரு. விக்ரமசிங்க, 3ம் பரிசு திரு. பி.ஆர் நிக்கலஸ் ஆகியோர் தேர்வாகியுள்ளனர்.

ஆறுதல் பரிசாளர்களாக திரு.ரவிதாஸ், ஜனாப்.எஸ்எம்.இர்ஷாத், எம்.ரி.சுகுமாறன், கே.யோகானந்தம், கே. ஜெபரட்ணம், எஸ்.பிரசாத், ஜனாப்.எம்.ஏம் முர்சிதா, ஜி.கே. ஆனந்த், எஸ்.கபிதேஸ், எஸ்.சிவகுமார் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

இந்நிகழ்வில் சங்கத்தின் செயலாளர் திரு. ஜீவாநந்தம், பொருளாளர் திரு.ந.ஸ்ரீஸ்கந்தராசா உட்பட சங்கப் போசகரும் சிரேட்ட உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## தென்கிழக்காசிய உலக வங்கித் தலைவர் மூதூர் வருகை

தென்கிழக்காசியப் பிராந்தியத்தின் உலவங்கி உதவித் தலைவர் பிலிப் லே ஹுரு மூதுஸருக்கு வருகை தந்துள்ளார்.

மூதூர்ப் பிரதேசத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் பார்வையிட வருமாறு கிழக்கில் முதல்வரால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் அவர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 25ம் திகதி இவரும் கிழக்கில் முதல்வர் உட்பட குழவினர் மூதூரில் முகாமிட்டிருந்தனர்.



## உன்னிச்சைக் கிராமத்திற்கு மின்

17 மில்லியன் ருபா செலவில் வவுனதீவு பிரதேச செயலகப்பிரிவுக்கு உட்பட்ட 200 வில் கிராமத்திற்கான மின் விநியோகம் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஜனாதிபதியின் இணைப்பாளரும் சுதந்திரகட்சியின் பிரதான அமைப்பாளருமான அருண் தம்பிமுத்து கலந்துகொண்டு இக் கிராமத்திற்கான மின் விநியோகத்தை ஆரம்பித்துவைத்தார்.யானை தாக்கத்திற்குள்ளாகும் 52 குடும்பங்கள் இதனால் பெரிதும் நன்மையடைந்துள்ளனர். மின்சாரசபையின் மாவட்ட பிரதி முகாமையாளர் பிரசாத் மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் மின் விநியோகம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வரதன்)





## சம்மாந்துறைக்கு 177 மில்லியன்

(எம்.ரீ.எம்.பர்ஹான்)

மாண்பு மிகு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பீல் ராஜபக்ஸ தலைமையில் சம்மாந்துறை தொகுதி அவிருத்தி தொடர்பான விடே கூட்டம் கடந்த 24ம் திகதி கொழும்பு ஹெக்டர் கொபேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயற்சி நிலையத்தில் இடம் பெற்றது.

இக் கூட்டத் தொடரில் சம்மாந்துறை தொகுதி அபிவிருத்திக்காக 177 மில்லியன் 'ருபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சம்மாந்துறை தொகுதி அமைப்பாளரும் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான அல் ஹாஜ் ஏ.எம்.எம்.நெளஷாட் அவர்கள் தெரிவித்தார்கள்.

இன் நிதியை கொண்டு சம்மாந்துறை பிரதேச செயலகம், நாவிதன் வெளி பிரதேச செயலகம், இரக்காமம் பிரதேச செயலகம் ஊடாக கிராமங்களுக்கான வீதி மற்றும் பாலங்கள், கிணறுகள், சனசமூக நிலையங்கள், வடிகான்கள், மின் இணைப்பு, நீர்விநியோகம், மயான புனரமைப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன் நிதியை ஒதுக்கீடு செய்து தந்தமைக்காக சம்மாந்துறை தெகுதி மக்கள் சார்பாக கௌரவ ஜனாதிபதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர்களுக்கு சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

## அறநெறிக்கு அனுப்புங்கள்



(ஆலையடிவேம்பு நிருபர்)

ஞாயிறு தினங்களில் பகல் 12மணிவரையிலாவது பிரத்தியேக வகுப்புக்களை நிறுத்தி அறநெறி வகுப்புக்களை நடாத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஆலையடிவேம்பு இந்துமாமன்றத் தலைவர் வே.சந்திரசேகரம் கோரிக்கை விடுத்தார்.

கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற ஆலையடிவேம்பு இந்து மாமன்றத்தினால் நடைமுறைப்படுத்தவுள்ள நாவலர் பாலர் பாடசாலை திறப்பு விழாவில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன் கலந்து கொண்ட நிகழ்வில் , அருளாளராக சைவப்புலவர் சிவஸ்ரீ க.லோக நாதக்குருக்கள், இந்து இளைஞர் மன்றத்தலைவர் த.கயிலாய பிள்ளை, முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.தர்மபாலன், அம்பாறை மாவட்ட முன்பள்ளி பணியக பொறுப்பாளர் ஏ.எல்.இப்றாகிம், முன்னாள் தவிசாளர் க.நடராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவா பொறிக்குள் இந்தியாவையும் தள்ள முயலும் இலங்கை

சஞ்சயன்

வன்னியில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு ஒப்பான படுகொலைகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம், வடக்கு மாகாணசபையில் கடந்த திங்கட்கிழமை ஒருமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

வரும் மார்ச் மாதம் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 25ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில், தான் வடக்கு மாகாணசபையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா மூன்றாவது தீர்மானத்தையும் கொண்டு வரும் முனைப்பில் ஈடுபட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம் கொண்டு வரப்படுவது உறுதி என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய சூழலில், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை வலுப்படுத்தும் ஒரு முயற்சியாகவே, வடக்கு மாகாணசபையின் தீர்மானமும் அமைந்துள்ளது.

வடக்கு மாகாணசபையில் ஆளும் கட்சியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, வரும் ஜெனிவா கூட்டத்தொடர் குறித்து இரண்டு கவலைகள் இருக்கின்றன. முதலாவது கவலை, அமெரிக்காவினது தீர்மானம் கடுமையானதாக - இலங்கை அரசுக்கு கடிவாளம் போடத்தக்கதொன்றாக இருக்க வேண்டும் என்பது.

இரண்டாவது, அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்துக்கு, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்பது.

கடந்த ஆண்டு கூட அமெரிக்கா, ஆரம்பத்தில் சமர்ப்பித்த தீர்மான வரைவு கடைசி நேரத்தில் இந்தியாவின் தலையீட்டினால், நீர்த்துப் போகச் செய்யப்பட்டது.

அதுபோன்றில்லாமல், இந்தமுறை தீர்மானம் கடுமையானதாக இருக்க வேண்டும் என்பதே - அதாவது போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச விசாரணை கோரும் தீர்மானமாக அது அமைய வேண்டும் என்பதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு.

அடுத்து, அமெரிக்கா கடுமையான தீர்மானத்தை முன்வைப்பதால் மட்டும் பயனில்லை. அதற்கு இந்தியா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளினது ஆதரவும் தேவை.

சர்வதேச விசாரணை கோரும் தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்தால், பல நாடுகளின் ஆதரவை இழக்க நேரிடலாம் என்பது அமெரிக்காவினது கவலை மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் உள்ள கவலை தான்.

வடக்கு மாகாணசபையில், நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், வடக்கிலுள்ள தமிழ்மக்களின் ஒட்டுமொத்த கருத்தாகவே பார்க்கப்படும் என்பதால், இது அமெரிக்காவுக்கும் சரி, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் சரி - அழுத்தம் கொடுக்கும் ஒன்றாகவே இருக்கும்.

இந்தக் கட்டத்தில் தான், இம்முறை ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் களத்தில் 'இறங்கத் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே, 2012ஆம் ஆண்டு, முதல்முறை அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்த போதே, அந்த தீர்மானத்துக்கு ஆதரவு திரட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்ல வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

ஆனால், அப்போதைய உள்நாட்டு அரசியல் சூழல் சாதகமாக இல்லாததால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்லவில்லை. பின்னர், கடந்த ஆண்டும் அதேபோன்ற கோரிக்கையும் எதிர்பார்ப்பும் எழுந்தது.

ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரபூர்வமாக ஜெனிவா கூட்டத் தொடரில் பங்கேற்கவில்லை.

அமெரிக்கா கொண்டு வரும் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கக் கோரி, உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதங்களை அனுப்பியது.

இம்முறை, ஜெனிவா கூட்டத்தொடருக்கு கூட்டமைப்பு செல்ல வேண்டும் என்ற அழுத்தங்கள் கோரிக்கைகள் உருவாக முன்னரே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜெனிவாவில் பிரசாரத்தில் ஈடுபடுவது குறித்து அறிவித்துள்ளார்.

அதாவது, வடக்கு மாகாணசபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்டுள்ள மக்கள் ஆணை என்ற கவசத்தையும், பலத்தையும் வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா களத்தில் குதிக்கப் போகிறது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யார், யார் ஜெனிவா கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர் என்று உறுதியாகவில்லை. இப்போதைக்கு அனந்தி சசிதரன் - ஜெனிவா செல்வது மட்டும் உறுதியாகியுள்ளது.

இந்தச் சூழலில், வடக்கு மாகாணசபை நிறைவேற்றிய, சர்வதேச விசாரணை கோரும் தீர்மானத்தை தேவையற்றதொன்று என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்குப் போதுமான சட்டங்கள் உள்நாட்டிலேயே இருக்கின்ற போது, எதற்காக சர்வதேச விசாரணை என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது கோரிக்கை சர்வதேச விசாரணை பற்றியதாக இருந்தாலும், அமெரிக்கா இன்னமும் தமது தீர்மானம் சர்வதேச விசாரணையைக் கோரும் ஒன்றாகவே இருக்கும் என்று உறுதியாக கூறவில்லை.

அமெரிக்காவினால் மட்டும் இதனை தீர்மானிக்க முடியாது.

தீர்மான வரைவு, உறுப்பு நாடுகளின் மத்தியில், உலாவ விடப்பட்டு, முன்மொழியப்படும் திருத்தங்கள் செய்யப்பட்டே, இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்படும். இந்தநிலையில், சர்வதேச விசாரணையை கோரும் தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்தாலும் கூட, அதனை பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ளும் நிலை இருந்தால் தான், அது சாத்தியமாகும்.

சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தை முன்வைப்பது குறித்து அமெரிக்கா இன்னமும் முடிவு செய்யாத நிலையில், இலங்கை அரசாங்கமோ, அமெரிக்கத் தீர்மானம் சர்வதேச விசாரணை கோரும் ஒன்றாக இருக்கலாம் என்பதை மையப்படுத்தியே கருத்துகளை வெளியிட்டு வருகிறது.

அத்தகைய விசாரணையால், நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் என்றும், இராணுவத்தினர் மத்தியில் ஒழுக்கம் குலையலாம் என்றும் வொசிங்டனில் வைத்து ஒரு மிரட்டல் விடுத்திருக்கிறார் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க.

அதுமட்டுமன்றி, சர்வதேச விசாரணை நடத்துவதானால், 1980இல் இருந்து நடந்த சம்பவங்கள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய விசாரணை வளையத்துக்குள் இலங்கைப் படையினர் மட்டுமன்றி முன்னாள் போராளிகளும், இந்திய அமைதிப்படையினரும் கூட அகப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச விசாரணையைக் கோருவதைப் பலவீனப்படுத்தும் உத்தியை இப்போது இலங்கை அரசாங்கம் கையாளத் தொடங்கியுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராகவும் விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களை குறைக்க முனைகிறது அரசாங்கம்.

அதுபோலவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், புலிகளுக்கும் இருந்த தொடர்பை வைத்து மிரட்டும் முயற்சிகளும் நடக்கின்றன.

மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனை புனர்வாழ்வுக்கு அனுப்பவுள்ளதாகவும் மிரட்டல்கள் வெளியாகின.

இவையெல்லாம் தமிழர் தரப்பில் இருந்து சர்வதேச விசாரணை அழுத்தங்களை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.



அதுபோலவே, இந்திய அமைதிப்படையினரின் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தும் விசாரிக்க நேரிடும் என்று மிரட்டுவதன் மூலம் இந்தியாவின் ஆதரவையும் இழக்கச் செய்யும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இத்தகைய விசாரணை ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு இந்தியா விரும்பாது. ஏனெனில் அது இந்தியாவினது கௌரவத்தைப் பாதிக்கும்.

இதனை அரசாங்கம் புரிந்து வைத்துக் கொண்டு தான், சர்வதேச விசாரணை வந்தால், இந்தியாவும் ஆபத்து இருக்கிறது என்று அரசாங்கம் மிரட்டத் தொடங்கியுள்ளது.

சர்வதேச விசாரணை ஒன்றையே அமெரிக்கா வலியுறுத்தும் என்ற கோணத்திலேயே அரசாங்கம் கருத்துகளை வெளியிட்டு வருகின்றது.

ஆனால், அமெரிக்கா கோருவது போன்று சுதந்திரமானதொரு விசாரணைப் பொறிமுறைக்கு இன்னமும் இணங்க அரசாங்கம் தயாராக இல்லை.

இருந்தாலும், இலங்கை அரசின் சுதந்திரமான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை என்பது எந்தளவுக்கு, நம்பகமானதாக இருக்கும் என்ற கேள்வி சர்வதேச சமூகத்திடம் உள்ளது.

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை மேற்குலகம் வலியுறுத்தினாலும் அத்தகைய விசாரணை நம்பகமானதாக இருக்கும் என்ற நம்பிக்கை அவர்களிடத்தில் இல்லை.

ஏனென்றால், அத்தகையு நம்பிக்கையை உருவாக்கும் வகையில் இலங்கை நடந்து கொண்டிருக்கவில்லை.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க ஓர் இராணுவ விசாரணை நீதிமன்றம் நியமிக்கப்பட்டது.

பொதுமக்களை இலக்கு வைத்து படையினர் தாக்குதல் நடத்தவில்லை என்று அந்த நீதிமன்றம் இறுதியான முடிவை அறிவித்தது.

அதனை உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை.

அந்த விசாரணை அறிக்கை நம்பகமானதாக இருந்திருந்தால், அமெரிக்கத் தூதரகம் தனது டுவிட்டர் பக்கத்தில், 2009 ஜனவரியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படையினரின் செல் தாக்குதலில் கொல்லப்பட்ட இடம் என்று இரணைப்பாலை சென். அந்தனிஸ் மைதானத்தை அடையாளப்படுத்தியிருக்க முடியாது.

இரண்டாவது, கடந்த ஆண்டு வெலிக்கடை சிறையில் நடந்த கலவரத்தின் போது, 27 கைதிகள் கொல்லப்பட்டது குறித்த விசாரணை அறிக்கையும் சர்ச்சைக்குரியதொன்றாகவே கருதப்படுகிறது.

இது இன்னமும் வெளியிடப்படாத போதிலும், கைதிகள் தமக்குத் தாமே சுட்டுக் கொண்டு இறந்ததாகவே விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக, தகவல்கள் கசிந்துள்ளன.

தப்பியோடிய கைதிகள், நடுவீதியில் வைத்து இராணுவத்தினரால் சரமாரியாக சுட்டுக்கொல்லும் காட்சிகள் ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்டன.

ஆனாலும், அதையெல்லாம் அனுபவமில்லாத கைதிகள் துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டுக்கொண்டதால் ஏற்பட்ட மரணங்கள் என்று விசாரணை அறிக்கை கூறியுள்ளதே, உள்நாட்டு விசாரணை ஒன்றின் நம்பகத் தன்மை எத்தகையதாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச விசாரணைக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதற்குப் பதிலாக அதை வலுப்படுத்துவதிலேயே இதுவரை கவனம் செலுத்திய அரசாங்கம், இப்போது, அந்தப் பொறியில் எல்லோரும் மாட்டிக் கொள்ள நேரிடும் என்று கூறி தப்பிக்க முனைகிறது.

இது எந்தளவுக்கு அரசாங்கத்தைக் காப்பாற்றும் என்பது, ஜெனிவாவில் தான் தீர்மானிக்கப்படும்.

(நன்றி - தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளக்கோட்டன் என்னும் தர்மசீலன்

பகுதி 01



திருகோணமலை வரலாற்றில் இதுவரை காலம் எவரும் பெற்றிராத மக்களின் பேராதரவையும் வரலாற்றுப் புகழையும் பெற்றவன் குளக்கோட்டன். குளக்கோட்டனின் இயற்பெயர் எது என்று தெரியவில்லை. குளமும், கோட்டமும் கட்டியதால் அவனுக்கு குளக்கோட்டன் என்ற காரணப்பெயர் வழங்கப்பட்டதாக வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். இவனது காலம் வரலாற்றுப் பின்னணி குறித்த ஆய்வுகளும் இன்னும் முற்றுப்பெறாத நிலையிலேயே உள்ளது. எது எப்படியிருப்பினும் திருகோணமலை வரலாற்றில் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற மன்னனாகக் குளக்கோட்டு மன்னன் விளங்குகிறான்.

மக்கள் மத்தியில் குளக்கோட்டனுக்கு இத்தகைய பெரும் செல்வாக்கு எப்படி ஏற்பட்டது. இதற்கான காரணங்கள் எவை? என்பன போன்ற கேள்விகளுக்கு தக்க ஆதாரங்களுடன் விடைகாண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குளக்கோட்டன் இத்தகைய பெரும் செல்வாக்குப் பெற திருகோணமலையில் அவன் மேற்கொண்ட கோணேசர் ஆலயத்திருப்பணியும், கந்தளாய்க் குளத்திருப்பணியுமே காரணம் எனப் பலரும் அபிப்பிராயங்களை வெளியிட்டாலும் ஆழ்ந்து சிந்திக்கின்ற பொழுது அவனது செல்வாக்குக்கு வேறு சில காரணிகளும் ஆதிக்கம் செலுத்தவே செய்கின்றன என்பதே உண்மையாகும்.

இவற்றை விரிவாக ஆராய்வதற்கு முன்னர் குளக்கோட்டன் பற்றிய விபரங்களைத் தரும் ஆவணங்களைப் பற்றிய குறிப்புளை நாம் தெரிந்து வைத்திருப்பது அவசியமாகிறது. குளக்கோட்டன் பற்றியும் அவனது செயல்பாடுகள் குறித்தும் விபரங்களைத் தரும் ஆவணங்களாவன. கைலாச புராணம் ,கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல வைபவம் , திருக்கரைசைப் புராணம் , கோணமலை அந்தாதி, யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணச் சரித்திரம் ,கந்தளாய்க் குளக்கட்டுக் காவியம் , குளக்கோட்டன் குறித்த திருகோணமலை கோட்டைச் சாசனம் மற்றும் பிற சாசனங்கள் என்பனவாகும்.

தென் கைலாயத்தின் தலபுராணம் என்ற பெருமைக்குரியது கைலாசபுராணம். குளக்கோட்டனும் கயபாகு மன்னனும் கோணேசர் ஆலயத்திற்கு ஆற்றிய தொண்டுகளை இது விபரிக்கின்றது. குளக்கோட்டன் இலங்கை வந்து தந்தையால் மேற்கொள்ளப்பட்டு முற்றுப்பெறாதிருந்த ஆலயப்பணியை நிறைவு செய்தான் எனவும் இதற்கு தந்தையால் முன்னரே சேமித்து வைக்கப்பட்ட திரவிய இருப்பைப் பயன் படுத்திக் கொண்டான் எனவும் அறியக்கூடியதாக உள்ளது.

கோணேசர் ஆலயத்தில் ஒரு மகாமண்டபம், முன் மண்டபம் ,உயர்ந்த கோபுரங்கள் ,திருமால் கோட்டம் ,அன்னசத்திரம் ,ஓதுவார் மண்டபம் ஆகியவற்றை அமைத்ததுடன் உமைக்கு ஒரு தனியாலயத்தையும் ,சுற்றுமதிலையும் உருவாக்கினான். பாவநாசத்தடாகத்தைக் கட்டி சிவன் நீராட ஒரு தனி மண்டபத்தை உருவாக்கினான். கோணேசப் பெருமானை தரிசிக்க வரும் அடியார்கள் தங்குவதற்காக பெரும் மண்டபங்களையும் மாளிகைகளையும் உருவாக்கினான். இவற்றோடு தன் கடமை முடிவுற்றது என எண்ணாது திருகோணமலை நகரை மலரும், கனிகளும் தரும் மரங்களால் சோலைகளாக்கினான். குளக்கோட்டன் ஆற்றிய சிறப்பான பணிகளில் ஒன்றாகிய குளத்திருப்பணியையும் தலபுராணமாகிய கைலாசபுராணம் சிறப்பித்துக் கூறுகிறது.

கைலாசபுராணத்திற்குப் பிற்பட்ட காலத்தில் எழுந்த நூல் கோணேசர் கல்வெட்டாகும். கோணேசர் ஆலயப் பணிகள் ஒரு குறைவுமின்றி சிறப்பாக நடைபெற குளக்கோட்டன் எத்தகைய திட்டங்களை மேற்கொண்டான் என்பது குறித்து இந்நூல் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

கோணேசர் ஆலய நிர்வாகம் தங்கு தடையின்றிச் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காக தமிழ் நாட்டிலிருந்து வன்னிபம் தானத்தார் வரிப்பத்து கருகுலக்கணக்கர் மற்றும் தொழும்பாளர்கள் ஆகியோர்களை அழைத்து வந்து அவரவர்களுக்குரிய கடமைகளை வகுத்து வழங்கியதோடு கடமையிலிருந்து தவறுபவர்களுக்கான தண்டனைகளையும் குளக்கோட்டன் வகுத்திருந்தான்.

*தொடரும்.....*

**வே. தங்கராசா**
**தம்பலகாமம்.**

## இப்படியும் சில மனிதர்கள்....?

அவர்கள் எழுத்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியை தழுவினாலும் அவர்கள் தமக்கு முன்னால் வரும் கடுமையான சவால்களிலிருந்து அவ்விடயத்தில் ஒரு சாதனையை படைக்க வேண்டுமென்று திடசங்கற்பம் பூண்டு அப்பிரதேசத்தில் வாராந்தம் வெளிவரும் பத்திரிகை நிறுவனத்தின் பிரதம ஆசிரியரை சந்திக்க சென்றனர்.

***கடந்த வாரத் தொடர்ச்சி ...***

அவர் பிரபல ஊடகவியலாளர் என்பதால் அங்கு பலரை அறிந்து வைத்துள்ளார். தன்னை உதவிக்காக தேடி வருபவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை புரிந்து வருவார். அந்த வகையில் அவர்களின் பிரச்சினைக்கு உதவ அவர் முன்வந்து தொலைபேசி மூலம் பலரை அணுகினாலும் எங்கும் பிரச்சினையை தீர்க்க கூடிய சாதகமான பதில் கிடைக்காததினால் அவர் நேரடியாக களத்தில் இறங்கினார்.
அவரே அந்த வங்கிக்குச் சென்று முகாமையாளரிடம் குறித்த பிரச்சினையையும், அந்த நகையின் முக்கிய தேவையையும் விளக்கினார். ஆனால் முகாமையாளர் பழைய பல்லவியையே முன்வைத்தார் மேலும் அப்பிரச்சினைக்கு மாற்றுத் திட்டம் அம்முகாமையாளரிடம் காணக் கிடைக்காததனால், பத்திரிகை ஆசிரியர் ஒரு மாற்றுதிட்டத்தை அங்கு முன்வைத்தார்.
அந்த மாற்றுத்திட்டம் ஏற்க கூடியதாக இருந்தது மட்டுமல்ல அப்படியொரு பிரச்சினைக்கு பத்திரிகை ஆசிரியர் முன்னர் முகம் கொடுத்த வேளையில் அரச வங்கி முகாமையாளர், ஒருவர் தனக்கு அத்திட்டத்தின் ஊடாக உதவி புரிந்தார் என்பதையும் அங்கு அவர் எடுத்துக் கூற மறக்கவில்லை.
மாற்று வழியை ஏற்று குறித்த வங்கி முகாமையாளர் அந்த பிரச்சினையில் சிக்கி இருந்த குடும்பத்தினருக்கு பத்திரிகை ஆசிரியரின் மாற்றுத் திட்டம் ஊடாக உதவி புரிந்தார். பிரச்சினை சுகமாக தீர்த்து வைக்கப்பட்டு இறந்தவரின் இறுதிக் கிரியைகள் எவ்வித குறையுமின்றி முடிவுற்றது.
மனித நேயம் என்பது வெறும் உதட்டளவில் இருக்கலாகாது. அது அடி மனதிலிருந்து வெளிவரவேண்டும். அதுதான் உண்மையான மனித நேயம் சிலர் தங்கள் நடப்பின் மூலம் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் சம்பவங்களை நாம் அறியாமலல்ல.
சில பிரமுகர்கள் தாம் பதவியிலிருக்கும் போதும் உதவ முன்வர மாட்டார்கள் பதவி அவர்களின் கரங்களை விட்டு போன பின்பும் உதவ முன்வரமாட்டார்கள். அப்படி அவர்கள் உதவினாலும் தமக்கு தேவைப்பட்டவர்களுக்கும், தமது இனபந்துக்களுக்கும் மட்டுமே உதவுவார்கள்.
அரசியல்வாதி ஒருவரிடம் பிரம்மா கேட்டாராம், இறந்த பின் உனக்கு எங்கே போக வேண்டும்? என்று!
அவரின் பதில எப்படியும் 'சொர்க்கம்' ஆகத்தான் இருக்கும் என்று பிரம்மா நினைத்தாராம்.
ஆனால் பதில் 'நரகம்' என அரசியல் வாதியால் கூறப்பட்டது.
அதற்கு காரணம் என்ன என்று பிரம்மா கேட்டாராம்.
'சொர்க்கத்தில் நான் தனித்து விடுவேன் எனக்கு நரகத்தில்தான் நிறைய நண்பர்கள் இருப்பார்கள்' என்று பதிலளித்தார்.
பொதுமக்களுக்கு சமூக சேவை செய்ய புறப்பட்டவர்கள், புறப்பட்டுக் கொண்டிருப்பவர்கள், மனித நேயத்திற்கு மதிப்பளிக்கவும் மக்களுக்கு அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொள்வதற்கும் பின்நிற்கலாகாது.

### ...நாட்டு நடப்பு...

அக்குடும்பத்தாரின் பிரச்சினை அன்று தீர்ந்தாலும் தாம் உதவி கோரி முதன் முதலில் தேடிச் சென்ற வங்கிச் சட்டத்தரணியை அவர்கள் விட்டு வைக்கவில்லை. பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் காரியத்தை கர்ச்சிதமாக முடித்துக் கொண்டோம் எனவும், அவ்விதமான பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்கள் உங்களை தேடி வந்தால் அந்த மாற்று வழிமூலம் உதவி செய்யுங்கள் என்றும் தொலைபேசி மூலம் அவருக்கு அந்த மாற்று வழியை கூறிய பொழுது அவரின் தளம்பலான குரல் மூலம் அவரின் அசடு வழிந்த முகம் எப்படி இருக்குமென குடும்பத்தார் யூகித்துக் கொள்ளத் தவறவில்லை.

**முற்றும்.**

**- பாலையூற்றான் -**

---

## நிறம் மாறும் வினோத முதலை

ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் உள்ளது கீலாங். இப்பகுதியில் உள்ள பாதுகாக்கப்பட்ட பெரிய ஏரியில் ஸ்நாப்பி என்ற முதலை உள்ளது. இது 8 அடி நீளம் உடையது. முதலைக்குரிய அனைத்து குணங்களுடனும் பார்வையாளர்களை மிரட்டி வந்தது.இதை பார்க்க ஏராளமானோர் வந்து செல்கின்றனர். இந்த முதலை திடீரென நிறம் மாற தொடங்கியது. தற்போது ஆரஞ்சு நிறத்துக்கு ஸ்நாப்பி முதலை மாறிவிட்டது. இந்த அதிசயத்தை காண பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்பைவிட அதிகரித்து விட்டது.
முதலை நிறம் மாறியது வியப்பாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் முதலையின் நிறம் மாற்றத்துக்கான காரணங்கள் குறித்து ஆராய மருத்துவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.



## *12000 அடி உயரத்தில் இருந்து கிழே விழுந்த ஸ்கை டைவரின் காப்பாற்றிய ஃபேஸ்புக் நண்பர்கள்.*

பிரிட்டன் நாட்டை சேர்ந்த ஸ்கை டைவர் ஒருவர் 12000 அடி உயரத்தில் இருந்து பாராசூட் உதவியுடன் கீழே குதித்து சாதனை செய்தபோது ஏற்பட்ட விபத்தில் சிக்கி பலத்த காயம் அடைந்தார்.
பிரிட்டனை சேர்ந்த 31 வயது டீநெ ஊழசனைஉம என்ற ஸ்கை டைவர் தெற்கு பசிபிக் தீவு ஒன்றில் 12000 அடி உயரத்தில் இருந்து குதித்து சாதனை செய்யும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். கிழே அவர் வந்துகொண்டிருந்தபோது அவர் அணிந்திருந்த பாராசூட் திடீரென வேலை செய்யாததால் 40 கிமீ வேகத்தில் மிக வேகமாக கிழே வந்து பார்க்கிங் செய்யப்பட்டிருந்த வேன் ஒன்றின் மீது பயங்கர அலறல் சத்தத்துடன் கீழே விழுந்தார். இந்த விபத்தில் அவருடைய இடது காலில் மூன்று இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மேலும் வலது தோளில் பயங்கர காயமும் ஏற்பட்டது.
Ben Cornick, சாதனையை செய்யும் முன் இன்சூரன்ஸ் எதுவும் செய்யாததால் அவருடைய மருத்துவ செலவான $30,000 அவரே சொந்த செலவில் இருந்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இந்த வி'யம் கேள்விப்பட்ட ∴ பேஸ்புக நண்பர்கள் ஆயிரக்கணக்கில் அவருக்கு பணம் அனுப்பினர். ஒரே வாரத்தில் அவருக்கு $80,000 வரை குவிந்துவிட்டது. அதன் பின்னர் அவர் போதுமான பணம் கிடைத்துவிட்டதால் வேறு யாரும் பணம் அனுப்ப வேண்டாம் என கேட்டுக்கொண்டார். Ben Cornick சமீபத்தில்தான் தந்தையானார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு உறவுகள்...

சிறுகதை
பாகம் -1

கலாபூஷணம் திருமலை
வீ.என்.சந்திரகாந்தி.

நித்தியாவிற்கு வாழ்கையே வெறுத்துவிட்டது. இலங்கை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கான பிரவேச அனுமதி அவளுக்கு ஓரிரண்டு புள்ளிகளால் தட்டுப்பட்டு போய்விட்டது. உற்சாகமாகவும் உறுதியுடனும் படித்தே இந் நிலையென்றால் மனச்சோர்வும் ஏமாற்றத்துடனும் இரண்டாவது தடவை முயற்சி செய்வதென்பதை அவளால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை.

அவள் அழுதழுது ஓய்ந்து விட்டாள். அவளுடைய திறமைக்கு, வெளிநாடு என்றால் ஏதாவது ஒரு .. கொலிச்சில் இலகுவாக அனுமதி பெறவும் நிதிப்பிரச்சனை இன்றி கற்கையை முடிக்கவும் முடிந்திருக்கும்.

கனடாவில் அவளது மச்சாள் தனது பட்டப்படிப்பின் இறுதிவருடத்தில் இருந்தபோது அமெரிக்காவில் மருத்துவக் கல்வியை மேற்கொள்வதற்கு சந்தா்ப்பம் ஒன்று கிடைத்தது. அதற்கான அனுமதிக்கு அவளது, டிகிரியின் பெறுபேறு ஒரு தகமையாக இருந்தாலும் அதனை அவள் ஒரு கால அவகாசத்தில் பூர்த்திசெய்து கொடுத்தால் போதும் என்றிருந்ததால் அவளுக்கு அது அதிர்ஷ்டமாகப் போய்விட்டது. எப்படியான விட்டுக் கொடுப்புக்கள்!

எமது நாட்டில் என்றால் எங்கெங்கு இறுக்க முடியுமோ அங்கெல்லாம் இறுக்கி விடுவார்கள். அவளது அப்பா அரச சேவையில் இலிகிதராக இருந்தவர். பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் குடும்பக் கஷ்டம் நிமித்தம் வேலையை பொறுப்பெடுத்தவர். அவருக்கு செல்வாக்கு இல்லாததால் எங்காவது காட்டுப் பகுதியில் உள்ள அலுவலகங்களில் அவரது காலம் போயிற்று. கொழும்பு அல்லது யாழ்ப்பாணம் என்று ஒரு தொழில் நுட்பக் கல்லூரிக்குப் பகுதி நேர கற்கை நெறிக்கு அனுமதி கிடைத்தாலும் அந்நாட்களில் இடமாற்றத்தைத் கொடுக்க மாட்டார்கள்.

அப்பாவின் சகோதரி ஒருத்தியும் சகோதரன் ஒருத்தனும் நாட்டுப் பிரச்சனைக்கு பயந்து கனடாவுக்கும்; மேற்கு ஜேர்மனிக்கும் ஓடிப்போய் அகதி அந்தஸ்து பெற்று இன்று பிள்ளைகளை நன்கு கற்பித்து சிறப்பாக இருக்கின்றார்கள்.

அம்மாவுக்கு அவர்களோடு ஒவ்வாது.! அப்பாவின் சம்பளம் வீட்டுச் செலவுக்கும் பாடசாலைச் செலவுக்குமே போதாது.

அப்பா அடிக்கடி தங்கையையும் தம்பியையும் பண உதவி கேட்பார். அவர்கள் அனேகமாக பஞ்சப் பாட்டுத்தான் பாடுவார்கள். கொட்டில் வீட்டை புதுப்பிப்பதற்கும், நித்தியாவின் பூப்புனித நீராட்டு விழாவுக்கும் கிள்ளித் தெளித்திருக்கிறார்கள்.

ஒழுங்கையில் ஏதோ அவலக்குரல் கேட்கிறது. சனங்கள் விழுந்தடித்து ஓடுவது குசினியில் ஏதோ வேலையாக இருந்த அம்மாவை உலுப்பிவிடுகிறது. படசாலைக்கு ஓடுகிறாள். நித்தியாவும் பரபரப்புடன் அவளுடன் இணைந்து கொள்கிறாள். நித்தியாவின் வீட்டிலிருந்து மூன்றாவது வீடு. அங்கேதான் சத்தம். சனங்களும் அங்குதான் திரளுகிறார்கள்.

ஆட்டோ ஒன்றில் யாரையோ ஏற்றிக்கொண்டு விரைகின்றார்கள். அங்கிருந்து வருபவர்களிடம் அம்மா தகவல் சேகரிக்கிறாள்.

ரமேஸ்.. நல்ல பிள்ளை.. கம்பஸ்.. கிடைச்சும் அவனை படிப்பிக்க குடும்ப கஸ்டம் இடம் கொடுக்கேல்லை எண்டு தகப்பன் கூறினவராம். பிள்ளைக்கு கவலையை தாங்கேலாமல் போச்சு.. நஞ்சை குடிச்சிட்டுது..

அம்மா துருவி ஆராய்கிறாள்.

ஏன் அவையளுக்கு தானே போதும் போதும் எண்ட வெளிநாட்டு உறவுக்காரர் இருக்கினம். அவையளும் கையை விரிச்சுப் போட்டினமாம்..

அம்மாவுக்கு நகைச்சுவை உணர்வு வந்து விட்டது. வெளி நாட்டுக்காரருக்கு இல்லாத கஷ்டமே சொந்தமாய் ஒரு வீடு வாங்க வேணுமெண்டாலும் பல லட்சக் கணக்காய் டொலரிலை.. வேணும். வேலைக்கு போக... படிக்க போக எண்டு ஆளுக்கு ஒரு கார் வேணும், தண்ணி , காப்புறுதி ,மின்சாரம் எண்டு எல்லா பில்லையும் சம்பளத்திலை கழிச்சுப் போடுவான்.

இனி குடும்பமாய் டூர் போவது, பொழுதுபோக்கு, உணவுவிடுதி எண்டு எத்தனையோ தவிர்க்க முடியாத ஆடம்பர செலவு. சொன்னால் நம்பமாட்டியள். நாங்கள் இஞ்சையிருந்து சேமிக்கிற நாலு பணத்தை தன்னும் அதுகளாலை மிச்சம் பிடிக்கேலாது..

ரமேஸினுடைய படிப்பு செலவை வெளிநாட்டிலை உள்ள உறவுக் காரர்களில் ஒருவர் தானும் ஏற்காததால் அந்த பிள்ளை நஞ்சு குடிச்சுட்டுது. எண்ட வெப்பிரசாரத்திலை நீ கதைக்கிறாய். அதுவும் சரிதான் நாங்கள் போறமணை, என்று கூறியவாறு கூட்டம் நகர்ந்தது.

நித்தியாவுக்கு ரமேஸ் நல்லதொரு நண்பன். தனியார் வகுப்புக்களில் சந்தித்து பழக்கம். அவனுக்கு இம்முறை பொறியியல் பீடத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. கஷ்டப்பட்டாவது படித்து முடித்தால் அவனது எதிர்காலம் பிரகாசமாய் இருக்கும்.

பிள்ளை நீ வீட்டிலை இரு, நான் போய் நிலைமையை நேரிலை அறிஞ்சு வாறன்..
அம்மா போய் விட்டாள்....

நித்தியா படலையை சாத்த சென்றபோது அவளது தந்தை அலுவலக நேரம் முடிந்து வந்துகொண்டிருந்தார். அவள் தந்தைக்கு நடந்தவற்றை கூறினாள்.

என்ன பிள்ளை செய்யிறது சம்பள ஏற்றமின்மை, பணவீக்கம், விலைவாசி உயர்வு எல்லாம் சனத்தை இயலாதவர்களாக்கி விட்டுது. வெளிநாட்டு உறவ்களின்ரை கையை எதிர்பார்த்து காத்திருக்கின்ற ஒரு சமுதாயம் உருவாகிக்கொண்டிருக்குது. அவையளும் உதவி செய்யிற மாதிரியான ஒரு நிலையிலை இல்லை, இஞ்சை என்னடா எண்டால், காஸ் ஐநூறு ரூபா கூடுதாம், மின்சார பில் 90 யுனிட் டுக்கு மேலே டபிள் ஆகுதாம். லக்ஸ்பிறே, அங்கர் விலை கூடுதாம் பெற்றோல், அப்படி!, இப்படி சொல்லி சொல்லியே சனம் இருக்கிற பிரஷரை இன்னும் கூட்டுது.

அப்பாவின் கண்களில் நீர் வடியாத குறை.

நித்தியாவுக்கு தந்தை கூறியதில் சம்மதம் இல்லை. அவள் அதிகம் பேசமாட்டாள். ஆனால் நிறையவே சிந்திப்பாள். அது தந்தைக்கு தெரியும். அவள் வாய் திறந்தால் அவர் உசாராகிவிடுவார்.

அப்பா!. நீங்கள் வெளிநாட்டு காரரின்ரை கையை எதிர்பார்க்கிற சமுதாயத்திலை ஒரு அங்கத்தவராய் இருக்கிறதை காட்டிலும் நீங்கள் வெளிநாடு செல்ல முயற்சித்திருந்தால் இண்டைக்கு அம்மாவையும் என்னையும் இலகுவாக கூப்பிட்டிருக்கலாம் தானே! அப்பா வோஷிங் ரூமுக்கு போகாமல் பேசினில் முகத்தை அலம்பி துவாயால் முகத்தை அழுத்தி துடைத்தபடி வந்து தனது ஈசிசேரில் சாய்ந்தபடி கூறினார்,



'நித்தியா' ஒரு கால கட்டத்திலை இந்த நாட்டிலை படிக்கிறது வேலைவாய்ப்பு பெறுகிறது எல்லாம் பெரும் கஷ்டமாய் இருந்தது. இந் நிலையிலை போராட்டம் வெடித்தது. அரசாங்க உத்தியோகம் எண்டு என்னை போல இருந்த ஒரு சிலரைத் தவிர மற்றவையெல்லாம் திரள் திரளாய் மேற்கு ஜேர்மனி, ஐக்கியராச்சியம், சுவிஸ், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, எண்டு புலம் பெயர்ந்து அகதி அந்தஸ்தோடை வாழ்கையை ஆரம்பிச்சினை. உத்தியோகம் மற்றும் வேறு வேறு தொழில் துறை எண்டு இருந்தவை நல்லாய் மாட்டுப்பட்டு போச்சினை. பிறகு பிறகு போக நினைச்சாலும் போக முடியாத நிலை வந்திட்டுது..

அம்மா ர்மேஷ் வீட்டால் வந்துவிட்டாள்,

என்னவாமணை? பிள்ளை ஏன் இப்படி ஒரு மோட்டு வேலையை செய்தவன்? இப்ப எப்படியாம்?.

ஆஸ்பத்திரிக்கு போனவை தகவல் தந்திட்டினை. பெடியனுக்கு பாரதூரமாய் ஒண்டும் இல்லையாம்.. அப்பாவுக்கு கோபம் தலைக்கேறியது, குடிச்சவன் வடிவாய் குடிச்சிருக்கலாமே!..

அம்மாவால் கவலையை தாங்க முடியவில்லை. பிள்ளைகள் இருக்கிற இடத்திலை கதைக்கிற கதை எது? கதைக்க கூடாத கதை எது எண்டு உங்களுக்கு தெரியாதெண்டு நான் சத்தம் போடுறது இப்படியான கதைகளுக்குதான்.

அம்மா மீண்டும் குசினிக்குள் போய்விட்டாள். 'பிள்ளை, நீ கவலைப்படாதை எல்லாம் பலன் படிதான் நடக்கும்' என்ரை தங்கச்சி கிட்டடியிலை கூட கேட்டவா. கனடாவுக்கு வாறதுக்கு புது பாதை ஒண்டு திறந்திருக்குது, கனடியன் எம்பஸியிலை குடிவரவு விண்ணப்பத்தை எடுத்து உரிய முறையிலை எங்கடை கனடியன் எம்பஸியிலை சமர்ப்பித்து அனுமதி பெற்று கனடா வரலாம். பயம் எதுவும் இல்லை. 'போர்ம்' எடுக்கிறதுக்கு கொடுக்கவேண்டிய பதினைஞ்சு இலட்சத்தை கட்டட்டாம். மிகுதியை அங்கு போய் உழைத்து கட்டலாமாம்.

மொத்தம் நாற்பது' இலட்சம் தானாம் வேணும். இருபத்தைந்தை உழைத்துக்கட்டலாமாம். உன்ரை அம்மாதான் ஒத்து வாறா இல்லை..
நித்தியாவுக்கு கோபம் கோபமாக வந்தது..

அப்பா உங்கடை கதை என்ன அப்பா உவ்வளவு காசை செலவு செய்ய எங்களட்டை எங்கை இருக்கு பணம்? மாமா மாமி பிள்ளைகள் இரண்டும் விமானரிக்கும் செலவோடை அந்த நாளையிலை கனடாவிலை போய் இறங்கி தெருவிலை முழுசி முழுசி கொண்டு நிண்டினமாம். அந்த நேரம் மாமாவின்ரை சினேகிதன் ஒருத்தன் எதிர்பாராத விதமாய் கண்டு தனது அறையை கொடுத்து வேலையையும் ஏற்பாடு செய்து கொடுத்ததாலை இண்டைக்கு அவையள் நல்ல நிலைக்கு வந்திட்டினம். இண்டைக்கு அப்படி போகக்கூடிய ஒரு நிலை இல்லை. ஆனால் அவையள் விரும்பினால் நான் படிக்கிறதுக்கு எனக்கு உதவி செய்யலாம்..

அன்றிரவு ரமேஷின் அப்பா நித்தியா வீட்டுக்கு வந்து தந்தையுடன் கவலைப்பட்டு கதைத்துக் கொண்டிருந்தார்.

மச்சான் நாங்கள் விட்ட பெரும் பிழை புலம் பெயர்ந்தவையோடை எங்களையும் இணைச்சுக் கொள்ளாததுதான்..

மகன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டது அவருக்கு பெரும் மன வேதனையைக் கொடுத்திருந்தது.

அப்பாவின் மன நிலையும் அவரின் மனநிலையும் ஏறத்தாள ஒன்றாகவே இருந்தது.
அப்பா கூறினார்..

அப்படி சொல்லாதை மச்சான், இண்டைக்கும் அவுஸ்திரேலியாவிற்கு சனம் புலம் பெயர்ந்து கொண்டுதான் இருக்குது.. எங்கடை மனுஷிமார்தான் எங்களை அசைய விடுகினம் இல்லை. உறவுகள் பந்தங்கள் எல்லாத்தையும் மறந்து ஓடினவங்கள் தான் இண்டைக்கு அவையளையும் அணைச்சுக்கொண்டு நல்லாய் இருக்கிறாங்கள்.

நித்தியா இப்போது தலையிட்டாள்,அவுஸ்திரேலியாவுக்கு வெளிக்கிட்டு கஷ்டப்பட்டு திரும்பினவையள் பலருடைய கதை உங்களுக்கு தெரியும். ஆனால் அங்கை போனவையளின்ரை கதையையும் தெரிஞ்சு கொண்டு நீங்கள் வெளிக்கிட்டால் தான் இப்ப நல்லது. அவுஸ்திரேலியாவிலை வரண்ட நிலம் நிறைய இருக்கு . அந்த வரட்சி , காட்டு பிரதேசங்களுக்கு பரவி தீ நாட்டுக்குள் பரவ வழிவிடும். இதை தடுக்கிறதுக்கு அந்த நாட்டு அரசாங்கம். ஒருவழியை கண்டு பிடிச்சிருக்குது. அது புலம் பெயர்ந்து போன எங்டை ஆட்களை காட்டு தீ பரவக்கூடிய எல்லை பிரதேசங்களில் குடியேற்றுவதுதான். காட்டுத்தீ பரவினால் அது முதல்லை எங்கடை ஆட்களை தான் தாக்கும். அவையள் பதறி அடிச்சு தீயணைப்பு பிரிவுக்கு அறிவிப்பினம். உடனை தீ அணைக்கப்படுவதால் அவங்கடை குடியிருப்பு பிரதேசங்களுக்கு வரக்கூடிய ஆபத்து தவிர்க்கப்படுகிது. ரமேஸின் அப்பாவுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நப்பாசைக்கு நித்தியா ஆப்பு வைத்துவிடவே அவரது யோசனை வேறு வழியில் திரும்பியது.

நான் உத்தியோகத்தன் அதாலை மகனுக்கு கம்பஸிலை உபகாரச் சம்பளம் (bursary) குடுக்கமாட்டான்கள். அதாலை தான் வெளிநாட்டு உறவுகளின்ரை உதவியை எதிர்பார்த்தன். ஆனால் அவை கையை விரிச்சுப்போட்டினம். அதாலை.. இருந்த நம்பிக்கையும் அறுந்து விடத்தான் மகன் தற்கொலை முயற்சியிலை ஈடுபட்டவன். நல்ல வேளை கடவுள் காப்பாற்றி போட்டார். அப்பா கூறினார்..

தொடரும்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உங்களுடன் ஒரு நிமிடம்

உங்களுக்காய் இந்த நிமிடம்என் வாழ்நாளின்
- என்
தோழர்களுக்காய் ஒரு நிமிடம்
சிந்திப்பதற்காய் உங்களுடன் ஒரு நிமிடம்

காதல், காதல் என்று திரியும் தோழர்களே !
அப்படியென்றால்
என்னவென்று நீர் அறிவீரோ. . . அறியும்
உங்களுடன் ஒரு நிமிடம்

பத்து மாத தாயை பரிதவிக்க விட்டு
பத்தாயிரம் உறவுகளை பாதாளம் தள்ளி
பத்து நிமிடம் தான் உன்னுடன் வாழும்- அந்த
எமனுலகப் பாதைதான் காதல்

பத்தாம் வகுப்பில் மதிப்பெண் குறைய
பின்னாலிருப்பதன் பெயர்
பட்டதாரிகளாய் வலம்வர இருப்பவர்களை
பைத்தியங்களாய் மாற்றுவதன் பெயர்

புரிந்து கொள் தோழர்களே - புத்தி கெட்டு
விண்ணுலகம் செல்லாதே - காகிதம் போல்
கசக்கி எறிவதன் பெயர் - இன்றைய காதல்
காதலை நம்பாதே !

கேதுஜா
(திருந்தாத தியாகிகள் சங்க உறுப்பினர்)
தி ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி



## உனக்காய்த் தான்

எமக்கு யார் தான் - உள்ளாரென்று
பலகதவுகளைத் தட்டி தட்டி
எமக்கு 'கைதான்' வலித்தது ஒழிய
பதில் கிடைக்கவில்லை.

பல ஏழைகளின் கண்ணீர்
ஆறாய் ஓடியது இளைஞர்களின்
கண்கள் தீப்பொறியாகியது –
கன்னியின்
கற்பு கருகிப் போகும் சாம்பலாகியது

தமிழ் மக்களின் அலறல், குழறல்
திருமலையின் சரித்திரமாகியது -
இதை
தட்டிக்கேட்க யாரும் இல்லையா என்று
குருதி பெருக்கெடுத்த போது

உனக்காய் நானிருக்கேன் என்று
தமிழ் மக்களின் மூச்சை சுவாசித்து
திருமலையில் சனிதோறும் எமக்காய்
வெளி வருகிறது மலைமுரசு

## கவலை

உன்-
கவலைக்குக் காரணமென்ன?

பறவை மாதிரி
பக்கத்தில் குந்திய
பறவை கேட்டது.

அவன் சொன்னான்.
ஈர விழிகளை அகல விரித்து
ஏன் வாழ்வே
பறி போய் விட்டது.

பறவை தேவதை
பறந்து போனது.

அவன் அத்தேவதையின்
வரவு எண்ணி
நீண்ட நாட்கள்
காத்திருந்தான்.
பறிபோன வாழ்வு
திரும்பக் கிடைக்குமென்ற
நம்பிக்கையில்..

தேவதையும் வரவில்லை
அவன் காத்திருந்து ..
காத்திருந்து ..
செத்துப்போனான்.

அவனின்
செத்த வீட்டிற்கு
தேவதை வந்தது

ஒரு சொட்டுக்
கண்ணீர் அதன்
ஈர விழிகளில் ..

- திருமலை சுந்தா -

## தேடல்

மழையைத் தேடினேன்
மப்பும் மந்தாரமாயிருந்தது
மலையைத் தேடினேன்
மண்ணும் கல்லுமாயிருந்தது
இறையைத் தேடினேன்
எதிரும் புதிருமானது
கலையைத் தேடினேன்
கரை தெரியவில்லை
உலகைத் தேடினேன்
உவர்ப்பாயிருந்தது
வாழ்வைத் தேடினேன்
வசந்தம் வீசவில்லை
உறவைத் தேடினேன்
உள்ளதும் போனது
அமைதியைத் தேடினேன்
அடிவானில் தெரிந்தது

குருவைத் தேடினேன்
இருந்த ஞானமும்
இல்லாமல் போனது
மனையைத் தேடினேன்
மாயையாய் வந்தது
என்னைத் தேடினேன்
இதயத்தைத் தோண்டினேன்
எல்லாமே என்னுள்
புதைந்து கிடந்தது
கறைகளைப் போக்கினேன்
புனிதமாய் ஆக்கினேன்
என் குறை தெளிந்தேன்
தேனாய் ஆனது வாழ்வு!

செ.சச்சிதானந்தகுமார்

## மலைமுரசு

கிழக்கின் ஓசைகளை
திருமலையில் ஒலிக்கச்
செய்து
பல பிரதேசங்களுக்கும் சிதற
வைப்பது.....

சுமதா கந்தசாமி.

கிழக்குப் பல்கலைக்கழகம்

# அரங்க விளையாட்டுக்களும் நாடக செயற்பாட்டில் அதன் பங்களிப்பும், முக்கியத்துவமும். கடந்த வார தொடர்ச்சி

உதாரணமாகக் கூறினால் நாடகங்களில் சண்டைக் காட்சிகள் வருகின்ற போது அடிபட்டு விழுகின்ற ஒருவரை இனனொருவர் தூக்குதல், காப்பாற்றுதல் போன்ற சம்பவங்களைக் குறிப்பிடலாம். எனவே இவ்வாறான எண்ணங்கள் மாணவர்களிடம் உருவாவதற்கு அரங்க விளையாட்டுக்கள் பெரிதும் துணை புரிகின்றன எனலாம்.

இன்னுமொரு அரங்க விளையாட்டை எடுத்துப்பார்த்தோமானால் "புரியாத மொழியில் கதைத்தல்" எனும் அரங்க விளையாட்டானது இருவரோ அல்லது இரு குழுக்களோ பிரிந்து நின்று எவருக்கும் புரியாத மொழியில் கதைத்தலாகும். இதன்போது பல்வேறு உணர்வுகளை புலப்படும் வகையில் மாறிமாறிக் கதைக்க வேண்டும். இவ்வரங்க விளையாட்டின் மூலம் நடிகர் ஒருவருக்கு மிகவும் முக்கியமான கூறான குரலைப் பயன்படுத்துதல் என்பது முக்கியத்துவப்படுகிறது. இவ்வாறு புரியாத மொழி மூலமாக சரளமாகக் கதைப்பதன் மூலம் அவர்களிடையே காணப்படுகின்ற குரல், பேச்சு சம்பந்தமான சங்கடங்களை போக்குவதற்கு இவ்விளையாட்டு துணைபுரிகின்றது எனலாம். சரளமாகக் கதைப்பதன் மூலம் தெளிவாகப் பேசும் தன்மை, கூச்சமின்றி ஒருவிடயம் சார்ந்து உரையாடும் தன்மை என்பன வளர்க்கப்படுகின்றது எனலாம்.

நடிகன் ஒருவன் தனக்குத் தரப்பட்ட கிளவியைப் பேசும் முறைமை நாடகத்தின் பொருளை வெளிப்படுத்த மிகவும் முக்கியமானதாகும். உண்மையில் நாடகபாடத்தில் எழுத்து வடிவம் அதன் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தாது. நடிகன் பேசுகின்ற முறைமையால்தான் அது வியாக்கியானிக்கப்பட்டு இறுதி அர்த்தத்தை வெளிப்படுத்தாது. நடிகன் பேசுகின்ற முறைமையால்தான் அது வியாக்கியானிக்கப்பட்டு இறுதி அர்த்தத்தைப் பெறும். எந்த ஒரு வசனத்தையும் நாம் எடுத்துக் கொண்டு அதன் சொற்களை அழுத்திப் பேசும் விதத்தில் அதன் அர்த்தத்தையே மாற்றி விடலாம். இதனோடு வேறு உள்ள மாற்றங்களையும் சோத்துக் கொண்டால் பல மாற்றங்கள் ஏற்படும். லய ஏற்ற இறக்கம், உறுதிப்படுத்தும் அல்லது வினாவும் குரல், மென்மையான அல்லது உரத்து வேகமாக, ஆறுதலாக, அடக்கமாக, அதிகாரத்தோடு பேசுதல் போன்வற்றையும் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை நடிகரிடத்தில் அவசியமாகின்றது. எனவே இவ்வாறான அரங்க விளையாட்டுக்கள் மூலமாகவும் இத்திறன்களை வளர்த்துக் கொள்ள முடியும்.

கற்பனைத்திறன் என்பது நாடக அளிக்கையில் நாடகம்சார் மாணவர்களுக்கு மிகவும் இன்றியமையாத [illegible] ஆகும். ஏனெனில் கற்பனைத் திறன் இருந்தால்தான் படைப்பாக்கத்திறன்



(Creative Skill) என்பது உருவாகும். இதனடிப்படையில் பல்வேறு அரங்கவிளையாட்டுக்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. உதாரணமாக ஒரு பொருளை மாணவர்களின் மத்தியில் வைத்துவிட்டு பொருள் பந்தாக இருக்குமானால் மாணவர்கள் அதனைப் பந்தாக பயன்படுத்தலாம். வேறு பொருளாகவும் பயன்படுத்தி தமது திறமையை வெளிப்படுத்துவார்கள். இங்கு கற்பனை பண்ணுவதற்கு இடமளிக்கப்படுகின்றது. எனவே நாடகச்செயற்பாட்டில் அரங்க விளையாட்டுக்கள் மாணவர்களது திறன்களை விருத்தி செய்வதில் இலகுவான முறையாக விளங்குகின்றன.

அடுத்ததாக நாடக செயற்பாட்டில் ஈடுபடும்போது மனமும் உடலும் தளர்வாக பதட்டமின்றி இருக்கும், செயற்படும் தன்மையினை இது வளர்க்கும். அதாவது உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்க்க அரங்க விளையாட்டுக்கள் உதவுகின்றன.

அரங்க விளையாட்டுக்கள் மூலமாக மாணவர்கள் சுதந்திரமாக செயற்படவும் சிந்திக்கவும் வழி ஏற்படுகின்றது. ஏனெனில் இவ்வரங்க விளையாட்டுக்கள் எவரையும் இறுக்கத்துடன் வைத்திருப்பதில்லை.

அடுத்தவாரம் அரங்கு அசையும்...

திருமதி. உமா சிறிசங்கர்
விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## அகில் அகினியின் ஆட்டத்தில் மயங்கிய சன்னிலியோன்

தெலுங்கு சூப்பர் ஸ்டார் நாகார்ஜுனாவின் இளைய மகன் விரைவில் சினிமாவில் நடிக்க உள்ளார். தற்போது நாகார்ஜுனன் தனது மகன் மற்றும் தந்தையுடன் நடித்த மனம் என்ற படம் முடிந்தவுடன் இளையமகன் அக்னி அகிலை அறிமுகப்படுத்தும் முயற்சியில் இருக்கிறார்.

அகில் அக்னி தற்போது நடந்துகொண்டிருக்கும் சிசிஎல் 4 கிரிக்கெட் போட்டியில் விளையாடி வருகிறார். தெலுங்கு அணிக்கு விளம்பர தூதராக இருக்கும் நடிகை சன்னி லியோன் அகில் அக்னியின் ஆட்டத்தை மிகவும் ரசித்ததாக கூறப்படுகிறது.

அகில் அக்னி ரன்கள் எடுக்கும்போதெல்லாம் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கைதட்டி மகிழ்வதோடு சன்னி லியோனும் கைதட்டி அவருக்கு உற்சாகம் ஏற்படுத்தி வருகிறார். அகில் அக்னியின் ஸ்டைலி'ன பேட்டிங் தன்னை மிகவும் கவர்ந்தது என்றும், ஒரு துணை கேப்டனாக அவர் மிகவும் பொறுப்புடன் விளையாடுவதாகவும் சன்னிலியோன் கூறியுள்ளார். மேலும் சிசிஎல் 4 தெலுங்கு வாரியர்ஸ் அணிக்காக விளம்பர தூதராக பெருமைப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் நாகார்ஜுனன் அவருடைய தந்தை மறைந்த நாகேஸ்வரராவ், மூத்தமகன் நாக சைதன்யா ஆகியோருடன் இணைந்து நடித்த 'மனம்' திரைப்படத்தின் சாட்டிலைட் உரிமையை 'ரூ.8 கோடி கொடுத்து சன் நெட்வொர்க் நிறுவனம் வாங்கியுள்ளது. இதுதான் தெலுங்கு படவுலகில் ஒரு புதிய சாதனை என்று கூறப்படுகிறது.

## செல்வராகவன் இயக்கத்தில் சிம்பு, தனுஷ் ஒன்று சேருகிறார்களா?



தனுஷ் தற்போது அனேகன் மற்றும் வேலையில்லா பட்டதாரி ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இந்த படங்களை அடுத்து மீண்டும் சுராஜ் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க அவர் முடிவு செய்துள்ளார். இந்த படத்திற்கு கதாநாயகியாக நயன் தாரா, மீண்டும் தனுடன் ஜோடி சேருகிறார்.

நயன் தாரா ஏற்கனவே யாரடி நீ மோகினி படத்தில் தனுடன் நடித்துள்ளார். மேலும் எதிர்நீச்சல் படத்தில் தனுடன் ஒரு குத்தப்பாட்டுக்கு நடனமும் ஆடியுள்ளார். தற்போது தனது போட்டியாளர் சிம்புவுடன் நயன் தாரா நடிப்பதால் தன்னுடனும் ஒரு படத்தில் நடிக்கும்படி தனுஷ் நயன் தாராவிடம் கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு நயன் தாரா ஒப்புக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும் சிம்பு நடிப்பில் செல்வராகவன் இயக்கவுள்ள படத்தில் கௌரவ வேடத்தில் தனுஷ் நடிக்க வேண்டும் என அழைப்பை தனுஷ் மறுத்துள்ளார். சிம்புவும் நானும் தற்போதுதான் மீண்டும் நண்பர்களாகி ஒற்றுமையாக இருக்கின்றோம். ஆனாலும் ஒரே படத்தில் நடிப்பது என்பது இருவருக்குமே இது ஏற்ற தருணம் அல்ல. எனது அண்ணன் படமாக இருந்தாலும், சிம்புவுடன் தற்போதைக்கு சேர்ந்து நடிக்கும் எண்ணம் இல்லை என்று கூறுகிறார் தனுஷ்.

## விஜய், அஜித்தை முறியடிக்கும் சிவகார்த்திகேயன் சம்பளம்



சின்ன திரையில் இருந்து சினிமாவுக்கு வந்த சிவகார்த்திகேயன் வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தின் மூலம் தனது ரேஞ்சை மாற்றும் சமயம் இது தான் என்று பெரிய பிசினஸ் பிளான் போட்டுள்ளாராம். அது என்னவென்றால் அவர் கல்லா கட்டற திறமையைப் பார்த்து கோடம்பாக்கத்துல பல வருஷமா பணம் சம்பாதிக்க ஆளாப் பறக்கறவங்களையே ஆச்சரியப்பட வச்சிருக்காரு. வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தின் வெற்றியினால், அவர் நடிக்கும் படங்கள் தற்போது சுமார் 25 கோடிக்கு பிசினஸ் ஆகும் வாய்ப்பு இருக்கிறது. மேலும் இப்போதைக்கு சிவாவோட சம்பளம் 5 கோடி ரூபாய்னு சொல்றாங்க. போன வருஷத்தோட டாப் கலெக்ஷன் ஹீரோங்கறதால அதுக்கு மேலயும் சம்பளம் கொடுக்க ஆட்கள் ரெடியா இருக்காங்கன்றது தனிக்கதை 5 கோடி வரைக்கும் போகும்னு சொல்றாங்க. அது மட்டுமின்றி, தயாரிப்பு விளம்பர செலவுகள் போக தயாரிப்பாளருக்குக் கிடைக்கும் லாபத்தில் பங்கும் கேட்கிறாரம். கூட்டிக் கழிச்சிப் பார்த்தால் ஒரு படத்துக்கு 15 கோடிக்கும் குறைவில்லாமல் கல்லா கட்ட ஆரம்பித்துவிட்டார். சிவகார்த்திகேயன். இன்னைய தேதிக்கு விஜய், அஜித்துக்கு அடுத்து அதிகமா சம்பளம் வாங்கறது இவராதான் இருக்கும்னு மீடியேட்டர்கள் சொல்றாங்க..

## காஜலின் போட்டி நாயகியாகிய நயன்!



தெலுங்கு சினிமாவில் தமன்னா, அனுஷ்கா ஆகியோர் பிசியாக நடித்துக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கான படங்களை கைப்பற்றி அடிக்கடி அவர்களுக்கு அதிர்ச்சி கொடுத்து வந்தவர் காஜல்அகர்வால். அதையடுத்து, பதிலடியை காஜலுக்கு கொடுக்க அவர்கள் இருவரும் நேரம் பார்த்து வந்தபோது அதற்கு வாய்ப்பு கெ?டுக்காத வகையில், இந்தி, தமிழ் என் எஸ்கேப்பாகிக் கொண்டிருந்தார் காஜல். ஆனால் அவர்கள் கொடுக்கத் தவறிய காஜலுக்கு இப்போது நயன்தாரா கொடுத்துள்ளார்.

## ஆக்ஷன் நாயகியாக நயன்தாரா



சினிமாவில் விஜயசாந்தி ஆக்ஷன் நடிகையாக கருதப்பட்டார். இவர் நடித்த வைஜெயந்தி ஐ.பி.எஸ். படத்தில் அதிரடி சண்டை போட்டார்.

இதே படத்தை பவானி என்ற பெயரில் ரீமேக் செய்து சினேகா நடித்தார். இவரும் தாவி குதித்து சண்டைபோட்டு ஆக்ஷன் நடிகை என்ற அடையாளத்தை பெற்றார்.

இவர்களுக்கு பிறகு அனுஷ்கா ஆக்ஷன் வேடங்களில் நடித்து வருகிறார். இரண்டாம் உலகம், ருத்ரமாதேவி படத்திலும் மகாராணி வேடத்தில் சண்டை காட்சிகளில் நடித்து வருகிறார். வாள் சண்டை, குதிரையேற்றம் போன்றவற்றில் பயிற்சிகள் எடுத்து இதில் நடிக்கிறார்.

அனுஷ்காவை தொடர்ந்து நயன்தாராவும் ஆக்ஷன் நடிகை அவதாரம் எடுக்கிறார். கோபிசந்த் ஜோடியாக நடிக்கும் தெலுங்கு படம் ஒன்றில் வில்லன்களுடன் அதிரடியாக சண்டை போட்டு நடிக்கிறாராம்.

ஐதராபாத்தில் உள்ள ராமோஜிராவில் காட்சியை படமாக்குகின்றனர். ஸ்டன்ட் மாஸ்டர் கனல் கண்ணன் இந்த சண்டை காட்சியை படமாக்கி வருகிறார். இப்படத்துக்கு பிறகு நிறைய ஆக்ஷன் படங்கள் நயன்தாராவுக்கு குவியும் என்கின்றனர்.

## மீண்டும் கோலிவுட் வரவுள்ள தலைவா நாயகி ராகினி நந்தவானி



ஏ.எல்.விஜய் இயக்கத்தில், விஜய் நடித்த படம் தலைவா. இந்த படத்தில் அமலாபால் முக்கிய நாயகியாக நடிக்க, இரண்டாவது நாயகியாக மும்பை நடிகை ராகினி நந்தவானி நடித்திருந்தார். விஜய்யை ஒருதலையாக காதலிக்கும் கதாபாத்திரத்தில் நடித்த ராகினி, ஒரு காட்சியில் அவரது உயிரையே காப்பாற்றுவார். அதனால் தியேட்டர்களில் விஜய் ரசிகர்களிடமிருந்து பெரிய அளவில் கைதட்டல் பெற்றார்.

அதோடு, நல்ல க்யூட்டான நடிகையாக இருந்த ராகினியை, அடுத்த காஜல்அகர்வால் என்றும் சிலர் கருத்து தெரிவித்தனர். ஆனபோதும், அதன்பிறகு கோடம்பாக்கத்திலுள்ள சில டைரக்டர்களை சந்தித்து சான்ஸ் கேட்ட ராகினிக்கு உடனடியாக எந்த வாய்ப்பும் கிட்டவில்லை. அதனால் கைவசமிருந்த இந்தி படங்களில் நடிப்பதற்காக மும்பைக்கு திரும்பிச்சென்று விட்டார். இந்த நிலையில், தற்போது மலையாளத்தில் மோகன்லால் நடிக்கும் பெருச்சாழி என்ற படத்தில் நாயகியாக நடிக்கிறாராம் ராகினி நந்த்வானி.

பிரசன்னா நடித்த அச்சமுண்டு அச்சமுண்டு படத்தை இயக்கிய அருண் வைத்யநாதன் இயக்கும் இந்த படத்தில், ராகினிக்கு அவரது வயதை மீறிய கனமான கதாபாத்திரமாம். அதனால், இப்படம் மூலம் மலையாளத்தில் ஆழக்காலூன்றி விடலாம் என்ற முடிவில் இருக்கும் அவர், மறுபடியும் கோடம்பாக்கத்தில் என்ட்ரி கொடுக்கப்போகிறாராம். குறிப்பாக, தமிழில் முதல் படமே விஜய்யுடன் என்பதால், அவருடன் மற்றும் அவருக்கு இணையான முன்னணி கதாநாயகர்களுடன் தான் பிரவேசிக்க வேண்டும் என்று ஆசைப்படும் ராகினி, அதி விரைவில் கோலிவுட்டுக்கு அதிரடி விசிட் அடிக்கப்போகிறாராம்.

## முதலில் எங்களை காதலிக்க விடுங்கள் ஹன்சிகா ஆவேசம்!

விரல் வித்தை நடிகரை காதலிக்கும் நடிகை தங்களை முதலில் காதலிக்க விடுமாறு பத்திரிக்கையாளர்களை கேட்டுக் கொண்டுள்ளார். புஸ் புஸ் நடிகை விரல் வித்தை நடிகரை காதலிப்பதாக அறிவித்தார். மேலும் தான் நடிப்பில் கவனம் செலுத்த விரும்புவதால் தற்போதைக்கு திருமணம் இல்லை என்றும் தெரிவித்தார். இந்நிலையில் அவர்களின் காதல் முறிந்துவிட்டது என்று செய்திகள் வந்தன. ஆனால் தாங்கள் காதலர்களாக இருப்பதாக நடிகை தெரிவித்தார். காதலித்தாலும் அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதும் இல்லை, சந்தித்துக் கொள்வதும் இல்லை. இதனால் அவர்களின் காதல் இருக்கு ஆனால் இல்லை என்றது போன்று உள்ளது.

இந்நிலையில் நடிகை கூறுகையில், முதலில் எங்களை காதலிக்க விடுங்கள். மீடியாக்கள் அமைதியாக இருக்கட்டும் என்று தான் நாங்களும் அமைதியாக இருக்கிறோம் எங்கள் காதல் எதில் முடிய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? நேரம் வருகையில் இது குறித்து நிச்சயம் மீடியாவுக்கு தெரிவிப்போம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழ்கடலில் சுவாசிப்பதற்கு உதவும் உபகரணம்?



மீன்களைப் போன்று நீரிலிருந்து ஒட்சிசன் வாயுவை பெற்று சுவாசிக்க உதவும் முகமூடி உபகரணமொன்றை தென் கொரிய வடிவமைப்பாளர் ஒருவர் உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

மீன்களின் சுவாசக் கட்டமைப்பு போன்று செயற்படும் இந்த "திரைட்டன்" என அழைக்கப்படும் உபகரணம், ஆழ்கடலில் ஒட்சிசன் கொள்கலனின் உதவியின்றி நீரிலிருந்தே ஒட்சிசனைப் பெற்று சுவாசிக்க வழிவகை செய்கிறது.

ஜியபையுன் யியோன் என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த உபகரணத்திலுள்ள நுண் காற்றழுத்தக் கருவிகள் கடல் நீரிலிருந்து ஒட்சிசனை வேறுபிரித்து அகத்துறிஞ்சி பயன்பாட்டாளருக்கு வழங்குகின்றன.

அத்துடன், இந்த கருவிகள் தேவைக்கு மேலதிகமாக தம்மால் அகத்துறிஞ்சப்படும் ஒட்சிசனை அந்த உபகரணத்துடன் இணைக்கப்பட்ட சிறிய தாங்கியில் சேமிக்கின்றன.

மேற்படி உபகரணம் வழமையான மின்னேற்ற பற்றரிகளிலும் பார்க்க 30 மடங்கு சிறிய நுண் பற்றரியால் சக்தியூட்டப்பட்டு செயற்படுகின்றது.

எனினும், இந்த கண்டுப்பிடிப்பு முழுமை பெற்று பாவனைக்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கு சிறிது காலம் தாமதமாகலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## மோட்டரோலாவை லெனோவாவிடம் விற்க அனுமதி வழங்கிய கூகுள்..!

கூகுள் தனது மொபைல் தொழில்நுட்ப கம்பெனியான மோட்டரோலாவை லெனோவாவிடம் 2.9 பில்லியன் டாலருக்கு விற்க முடிவு செய்து இரு நிறுவனங்களுக்கிடேயே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக கூறப்படுகிறது. நேற்று வெளியான இத்தகவல் மூலம் கூகுளுக்கு இருந்த நிதி தொடர்பான தலைவலி முடிவுக்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 2012-ல் 12.4 பில்லியன் டாலர் கொடுத்து கூகுள் வாங்கிய மோட்டரோலா கம்பெனியின் வர்த்தகம் குறுகிய காலத்திலேயே 2 பில்லியன் டாலர் அளவுக்கு மோசமாக குறைந்தது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ 20000 பேர் வேலை செய்த கம்பெனியில் தற்போது 3800 பேர் மட்டுமே பணிபுரிந்து வருவதாக கூறப்படுகிறது.

ஆனாலும் மோட்டரோலாவின் மொபைல் காப்புரிமையை அது தன்னகத்தே நிறுத்திக் கொண்டுள்ளது.

இந்த காப்புரிமையை பயன்படுத்தி ஆண்டிராய்ட் மென்பொருளையும், டேப்லட் கம்ப்யூட்டர்களையும் உருவாக்க முடியும். இதை மனதில் வைத்தே 15 ஆண்டுகளாக வளைதள பிரிவில் முத்திரை பதித்து வரும் கூகுள், மோட்டரோலாவை லெனோவாவிற்கு விற்க முடிவு செய்ததாக கூறப்படுகிறது.

# விளையாட்டுப் பையன்

## கைப்பேசிகளில் அழிந்த தரவுகளை மீட்க வேண்டுமா..??...

கைப்பேசிகளில் உண்டாகும் வைரஸ் தாக்கங்களால் அவற்றில் சேமிக்கப்பட்டிருந்த தரவுகள் அழிந்து போவதற்கான சாத்தியங்கள் அதிகளவில் உள்ளன இதனால் ஏற்படும் தரவு இழப்பினை தவிர்ப்பதற்கு பேக்கப் செய்யும் வசதி தரப்பட்டுள்ளது....

இதனையும் தாண்டி அழிவடைந்த தரவுகளை மீட்டுக்கொள்வதற்கு ாிழநெஆைநெ எனும் மென்பொருள் உதவியாக காணப்படுகின்றது. இதன் மூலம் வீடியோக்கள், புகைப்படங்கள் போன்றவற்றினையும் அழிந்த மின்னஞ்சல்கள், தொலைபேசி இலக்கங்கள் போன்றவற்றினையும் மீட்கக்கூடியதாக இருக்கின்றது....

## கையடக்கத் தொலைபேசி இணையத்தள சேவை..!




தென் கொரியாவானது முழுமையான திரைப்படமொன்றை ஒரு செக்கனில் பதிவிறக்கம் செய்யக்கூடிய 5-ம் தலைமுறை கையடக்கத்தொலைபேசி இணையத்தள சேவையை அறிமுகப்படுத்த தயாராகியுள்ளது.

இதன் பிரகாரம் மேற்படி 5 ஜி என்ற ஐந்தாம் தலைமுறை கையடக்கத் தொலைபேசி சேவைகளில் 900 மில்லியன் ஸ்ரேலிங் பவுணை தென் கொரியா முதலீடு செய்துள்ளது.

இந்த சேவையை பரீட்சார்த்தமாக 2017-ம் ஆண்டு அறிமுகப்படுத்தவும் அதனை 2020-ம் ஆண்டு டிசம்பருக்குள் வர்த்தக ரீதியாக செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி தொழில்நுட்பமானது ஒரு செக்கனில் 800 மெகா பைட் அளவான திரைப்பட கோப்பை பதிவிறக்கம் செய்வதற்கு பயன்பாட்டாளருக்கு அனுமதிக்கிறது.



# ஒரு கொலையின் கதை

40 (மாயன்)

" இன்னும் ஆட்சேபகைள் ஏதும் உண்டா?"

"இல்லை"

" அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்ட அனைவருக்கும்....

நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன் அந்த அடையாள அணிவகுப்பு நிறைவு பெற்றது.

அடையாண அணிவகுப்பின் முடிவில குற்றவாளிச் சந்தேகநபர்களை தெளிவாகச் சாட்சியாளர்கள் வெளிக் காட்டியிருந்தனர். அவர்கள் கொலை நடந்த போது திருகோணமலையில் இருந்ததை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

அச் சான்றுகள் அவர்கள் திருகோணமலையில் இருந்ததை மட்டுமே உறுதிப்படுத்தியிருந்தன.

அடுத்ததாக கொலை நடந்த இரவில் சந்தேக நபர்களுள் ஒருவர் கொலை நடந்த இடத்திற்கு அண்மையில் நடமாடியதை சாட்சியாளர் உறுதிப்படுத்தியிருந்தார்.

சந்தேக நபர்கள் கொலைக் கருவியொன்றை அண்மையிலுள்ள கடையொன்றில் கொள்வனவு செய்ததைய் அதனைக் கொள்வனவு செய்தவரையும் சாட்சியாளர் அடையாளம் காட்டியிருந்தார்.

இரண்டு சாட்சியாளர்கள் ஒருவரை மட்டுமே அடையாளம் காட்டியிருந்தனர்.

அந்த ஒருவரே கடையில் கத்தி வாங்கியவராகவும், கொலை நடந்த இடத்தில் கொலை நடக்கும் நேரத்திற்கு சற்று முன்னர் நடமாடியவராகவும் காணப்பட்டிருந்தார்.

இரண்டாம் நபர் முதலாம் நபருடன் திருகோணமலைக்கு வந்ததையும் தங்கியிருந்ததையும் மற்றொரு சாட்சியாளர் உறுதிப் படுத்தியிருந்தார்.

ஆனால் இவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ கொலை செய்ததைக் கண்ட எந்தச் சாட்சியங்களையும் அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

சாட்சியங்களின் அடையாள அணிவகுப்பின் பின் ஒரு மொத்தப் பொழிப்பாக இவைதான் புலனாய் வாளர்களுக்கு எஞ்சியிருந்தன....

இன்னும் அவர்களுக்கு தேவையானது இவர்களில் ஒருவர்தான் அந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்பதை நிரூபிக்கக்கூடிய சான்று... அது எது... அந்தச் சான்றைத் தரப்போவது எது......

## ஆயர்களைச் சந்திக்க விரும்புகிறாரா சனாதிபதி ?

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆயர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சந்திக்கவுள்ளதாக அரசாங்க தகவல்கள் கூறுகின்றன. வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து ஆயர்களுடன் கலந்துரையாட ஜனாதிபதி விரும்புவதாகவும் அதற்கான அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி செயலக தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதியின் இந்த அழைப்பு தொடர்பாக கருத்து வெளியிட மறுத்த யாழ் ஆயர் இல்ல வட்டாரங்கள் ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடருக்கு முன்னதாக இடம்பெறும் சந்திப்புக்களில் ஆயர்கள் கலந்துகொள்வது சாத்தியமில்லை என கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னர் வடக்கு கிழக்கில் சமூக பிரமுகர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திக்க விரும்புவதாக கூறப்படுகின்றது.

## ஆலையடிவேம்பில் பட்டதாரிப் பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கிவைப்பு



ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்கு கடந்த 2012 ஆம் வருடம் பட்டதாரிப் பயிலுனர்களாக இணைக்கப்பட்டவர்களில் மேலும் 29 பேருக்கு மூன்றாம்கட்டமாக நிரந்தர நியமனங்கள் வழங்கும் நிகழ்வானது 29.01.2014, புதன்கிழமை

பிரதேச செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றபோது இந்நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு பிரதேச செயலாளருடன் இணைந்து நியமனங்களை வழங்கிவைத்தார்கள்.

# ஒரு கொலையின் கதை

**கொலையின் கதையின் பாகம் I**

**நிறைவுற்றது... பாகம் II - 15.02.14 ல்**

**இருந்து......**

**வாசகர்களே... கொலையின் கதை தொடர்பாக உங்களது கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விளையாட்டுக் கழகங்களுக்கு அமைச்சரின் உதவிகள்

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீரப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பையின் நான்கு இலட்சம் 'ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் பொத்துவில் பிரதேசத்திலுள்ள 12 விளையாட்டு கழகங்களுக்கான சீருடைகள், விளையாட்டு உபகரணங்கள் நேற்று பொத்துவில் பசுபிக் ஹோட்டலில் வைத்து வழங்கப்பட்டது.

பொத்துவில் விளையாட்டுக் கழகங்களின் சம்மேளன தவைர் எஸ்.ரி.முஸ்தபா ஆசரியர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை மற்றும் தேசிய காங்கிரஸின் பொத்துவில் பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.பதுர்காண், முன்னாள் கோட்டக்கல்வலிப் பணிப்பணிப்பாளர் எம்.காதர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்திய, கோவாவில் நடைபெற்ற 12 நாடுகள் பங்குபெறும் விளையாட்டு போட்டியில் 4100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று நாட்டுக்கும், பிரதேசத்திற்கும் பெருமை தேடித் தந்த பொத்துவில் எம்.அஸ்ரபிற்கான பாராட்டு நிகழ்வினை பாரியளவில் செய்வது தொடர்பாகவும் இந்த நிகழ்வில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## கிழக்கின் வீரரால் கோவாவில் இலங்கைக்குத் தங்கப் பதக்கம்




இந்தியாவின் கோவாவில் நடைபெற்ற 12 நாடுகள் பங்கு பெறும் விளையாட்டுப் போட்டியில் 4 100 அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை சார்பாக சென்று தங்கப்பதக்கம் வென்ற பொத்துவில் ஏ.எல்.எம்.அஸ்ரபை வரவேற்று கௌரவமளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை(01) பொத்துவிலில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எம்.அப்துல் வாஸித் தலைமையில், பொத்துவில் பிரதேச அனைத்து விளையாட்டுக்கழகங்களின் சம்மேளனம், பொது அமைப்புக்கள் என்பன ஒன்றிணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளன.

வெற்றி குறித்து அஷரப்பை தொடர்புகொண்டு கேட்டபோது,

"இலங்கைக்காக சர்வதேசத்தில் பதக்கம் ஒன்றை பெறவேண்டும் என்ற தனது நீண்டநாள் கனவு நனவாகியுள்ளது. அத்துடன் எமது வெற்றிக்கு பங்களிப்புச்செய்த ஒவ்வொருவருக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்கும் நன்றி இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துகொள்கின்றேன்" என தொலைபேசியில் தெரிவித்தார்.

(ரீ.கே.றஹ்மத்துல்லா)

## மார்பகப் புற்று நோய்க்கு எதிராகப் பந்து வீசும் மக்ராத்

கடந்த வாரம்---

சில வருடங்களுக்கு முன்னர் கிரிக்கெட் போட்டியொன்றின் உணவு இடைவேளையில் ஆஸித் தொலைக்காட்சியான சனல் 9 இன் வர்ணனையாளர்களுடன்........

இந்தவாரம்----

மக்ராவின் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றிருந்தது. அதில் தனது மனைவியின் கனவை தான் நிறைவேற்றப் போவதாகக் கூறிக் கொண்டிருந்தார். அதன்படி தனது Charityin பிரதான நோக்கங்களாக ஆஸ்திரேலியாவில் வாழும் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட எந்தப் பெண்ணும் தனது அமைப்பிலிருக்கும் விசேட பயிற்சி பெற்ற தாதியொருவரின் உதவியையும் ஆதரவையும் முற்றிலும் இலவசமாகப் பெற முடியும். இந்த உதவிக்கு வைத்தியரின் எந்த ஒரு சிபார்சுக் கடிதமும் தேவையில்லை.

தனது மனைவி கேட்டுக் கொண்டபடி இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்ச்சியையும் அறிவையும் எல்லாப் பெண்களுக்கும் ஏற்படுத்துவதன் மூலம் அதை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டுகொள்வதால் முற்றிலுமாகக் குணப்படுத்த உதவுதல். மெல்பர்ன். விக்டோரியாவில் அமைந்துல்ல La Trobe University தாதிகளை உருவாக்கும் செயற்திட்டங்களை அமைத்து இணைந்து தொடர்ந்து தாதிகளை உருவாக்குதலும் அந்தத்தாதிகளுக்கான சம்பளத்தை தனது அமைப்பே தொடர்ந்து வழங்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

இது மிகப் பெரிய விடயம். ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய பாரிய பணி. இதனை இவரால் எப்படிச் செய்ய முடியும் என்று எதார்த்தமாகச் சிந்தித்தபடி . பார்த்துக் கொண்டிருந்த எனக்கு ஒரு சராசரி மனிதனுக்கு ஏற்படக் கூடிய இரண்டு எண்ணங்கள் ஏற்பட்டது.

1 ) பாவம்..எல்லா மனிதர்களையும் போலே மனைவியை இழந்த வேதனையில் உணர்ச்சி வசப்பட்டு பேசுகிறார்.

2) அனேகமான விளையாட்டு வீரர்கள் தமக்குக் கிடைக்கும் எக்கச்சக்கமான பணத்தை வருமான வரியில் இருந்து பாதுகாப்பதற்காக போலியாகவும், தமது பேருக்காகவும் உருவாக்கும் Charity ஒன்றுதான் இதுவும் என்ற முடிவுக்கே நான் வந்திருந்தேன்..

ஆனால் நடந்ததோ வேறு.......


ஆஷஸ் என்ற பாரம்பரியமான கோப்பைக்காக டெஸ்ட் கிரிக்கெட்டை விளையாடிவிட்டுச் செல்லும். இங்கிலாந்து இங்கு வராத சீசனில் வேறு ஒரு நாட்டு அணி ஆஸி வந்து விளையாடிவிட்டுச் செல்லும்.

சில வருடங்களுக்கு முன்னர் மக்ரா கேட்டுக் கொண்டதற்கிணங்க சிட்னியில் ஜனவரி 3ம் திகதியில் இருந்து 7ம் திகதிவரை நடைபெறும் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளை ஜேன் மக்ரா நாள் என்றும் அன்றைய நாளில் சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் Mc Grath Foundation ற்குப் பணம் சேர்க்கும் வைபவங்கள் இடம் பெறும் என்றும் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது. அந்த நாளை உலகெங்கும் மார்பகப் புற்று நோயைக் குறிக்கும்

**கிரிக்கட் கிறுக்கனின் கிறுக்கல்கள் தொடரும்......**



## ஜெயம் பாலகம்
### குறுக்கெழுத்து புதிர்- 005



**இடமிருந்து வலமாக**

1. திருகோணமலையின் வரலாற்றுச் சின்னங்களில் இதுவும் ஒன்று.
5. மரத்தை சுற்றி அமைக்கும் மேடை
6. இலங்கை அரசின் கிராம எழுச்சி திட்டம் (திரும்பியுள்ளது).
7. 2022ல் உலக கிண்ண கால்பந்து போட்டி நடைபெற உள்ள நாடு.
9. தமிழர்களின் பாரம்பரிய கூத்துகளில் இதுவும் ஒன்று.
11. இந்திய மாநிலம் மேற்குவங்கத்தின் முதல்வர்.
13. விக்ரம் நடித்த படங்களில் ஒன்று.
14. செல்வத்தை இவ்வாறும் அழைப்பர்.
16. பூவிதழை இவ்வாறும் அழைப்பர்.
18. தமிழ்மூவாயிரம் என அழைக்கப்படுவது.

**மேலிருந்து கீழாக**

1. பூச்சியத்தை கண்டு பிடித்த நாட்டினர்.
2. உடல் கூனல் (தலைகீழ்)
3. நெடுந்துரத்தை இவ்வாறும் அழைப்பர். (தலைகீழாக.)
4. 'புதியதோர் உலகம் செய்வோம்' என முழங்கியவர்..
6. மாறுபடுதலை இவ்வாறும் அழைப்பர்
8. தேயிலைத் தோட்டத்தின் மேற்பார்வையாளர். (குழம்பியுள்ளது)
10. தாய்க்குப் பின் ...........
11. மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையம் அமைந்துள்ள இடம்.
12. பரமசிவனை இவ்வாறும் அழைப்பர். (குழம்பியுள்ளது)
15. தமிழையும் அதன் கிழை மொழிகளையும் இவ்வாறு அழைப்பர்.
17. இயற்கையின் சமநிலையை பேணுவது.

### குறுக்கெழுத்து புதிர்- 004 ற்கான விடைகள்

**இடமிருந்து வலமாக**

1. மெய்க்கீர்த்தி
2. கீர்த்தி
4. காலாந்தகன்
5. மரம்
7. மெல்லுதல்
8. தாயம்
10. வேதமாதா
12. அகழ்வு
14. கண்டி
15. கர்வம்
16. மலையன்

**மேலிருந்து கீழாக**

1. மெய்க்காவலன்
2. கீர்த்தனை
4. கந்தகம்
5. காவலன்
6. மறியல்
9. அகல்
11. தலைத்தாழ்வு
12. தாண்டவம்
13. அதர்மம்
17. மாகதர்

**போட்டி முடிவு திகதி: 06.02.2014**

✸ விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்

✸ முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/=, 150/=, 100/= பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

✸ இப்போட்டியில் ஜெயம் பாலகம், மலைமுரசு ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-**
**ஜெயம் குறுக்கெழுத்துப் போட்டி. இல -001**
**32, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத்தின் மீது நீளும் கொலைக்கரம்

"உன்னுடைய கருத்துகளில் ஒன்றுடனோடு கூட எனக்கு உடன்பாடு கிடையாது. ஆனால் அக்கருத்துகளைச் சொல்ல உனக்கு இருக்கும் உரிமையை என்னுடைய உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவேன்"

ஜனநாயகத்தின் மக்களாட்சியின் மகத்தான மகுட வாக்கியங்களில் முதன்மையானது. இது ஆனால் இன்று இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை,அவசியத்தை கற்பனை பண்ணிப் பார்க்கும் நிலை கூட இந்த நாட்டில் இல்லை என்பது தான் உண்மை. செய்திகள் .கட்டுரைகளின் நோக்கம் அபிப்பிராயத்தை உருவாக்குவது தகவல்களை அறிய தருவது என்றியிருப்பது தேவையானது ஊடகத்துறையின் வளர்ச்சியை உற்று நோக்கும் பலர் இதன் பரிணாமத்தைப்பார்த்து வியப்புறும் போதிலும் வேறு பலர் இதனை ஒரு மிகச் சாதாரண சாதனமென்றே கருதுகின்றனர்

இந்த நாட்டில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டியிருந்த காலத்துக்கு முன்னர் இருந்தே தொடங்கப்பட்டியிருக்கிறது.

ஊடகத்துறையின் மீதான வன்மம் .1979 ஜுலை மாதத்திலிருந்தே பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகால நிலையும் இலங்கையில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இடையிடையே ஒரு சில ஆண்டுகள் இவை நடைமுறையில் இருந்திருக்கவில்லை என்றாலும் அவசரகாலநிலையின் கீழ் நீண்ட காலமாக ஆட்சி நடாத்துகிற அரசு இலங்கை அரசாகத்தான் இருக்க வேண்டும். விதிவிலக்காக அமைய வேண்டியதே விதியாக அமைகின்ற ஒரு அவலமான சூழல் இலங்கையில் நிலவுகின்றது. இலங்கை ஒரு ஜனநாயக அரசு என்பதை எத்தகைய கேள்விகளுக்கும் இடமில்லாமல் "சர்வதேசச் சமூக"மும் இந்திய அரசும் ஏற்றுக்கொண்டு நடப்பதால் ஊடக சுதந்திரங்களும் அடிப்படை உரிமைகளும் சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமையும் மோசமாக மீறப்படுகிறபோதும் போர்ச் சூழலில் இவை தவிர்க்க முடியாதவை எனவும் பயங்கரவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது எனவும் நியாயப்படுத்தப்படுகிறது. எதிரிகளுக்கும் காட்டுமிராண்டிகளுக்கும் எந்த உரிமையும் கிடையாது என்பதே தாராளவாத ஜனநாயகத்தின் இரட்டை நிலைப்பாடாக இருக்கிறது.

ஈழத்தமிழர்களின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்த காலங்களில் போர் உலக அளவில் மறக்கப்பட்ட ஒன்றாகும். கொல்லப்படுவோர் எண்ணிக்கையிலும் மானிட அவலத்திலும் உலகின் மிக மோசமான போர் என்று சர்வதேசத் தொண்டு நிறுவனங்களாலும் மனித உரிமை அமைப்புகளாலும் வர்ணிக்கப்படும் இந்தப் போர் பற்றிய சரியான விவரங்களையும் பொதுமக்களுக்கு ஏற்படும் பாரிய இழப்புகள் பற்றிய தகவல்களையும் களத்திலிருந்தும் தளத்தில் இருந்தும் தருவதற்கு எந்தச் சர்வதேச ஊடகமும் இல்லை.ஊடகவியலாளர்களையும் தொண்டு நிறுவனங்களையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்களையும் போர்ப் பகுதிகளிலிருந்து அரசாங்கம் எப்போதோ வெளியேற்றிவிட்டது. எந்த ஊடகவியலாளருமே அங்கே செல்வதற்கு அரசாங்கம் தடைவிதித்திருக்கிறது. உடன்படுகையாளர்களாகக்கூடப் (embedded!) பத்திரிகையாளர்கள் அங்கு இல்லை. இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தின் உத்தரவாதத்தினால் வந்த வினையாகத் தோன்றுகிறது .சுதந்திரமானதும் பகிரங்கமானதுமான மோதலில் உண்மைத்தன்மை தெரிந்தவரே மோசமான நிலைக்கு தள்ளப்படுவர்.

பெரும்பான்மையான மக்கள் அது குறித்து அதிர்ச்சியடைந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். எதிர்பார்ப்புகளுக்கு மாறாக ஒட்டுமொத்தச் சூழலையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், மக்களின் எதிர்வினை போதிய அளவு இல்லை. போர் மக்களிடையே பிளவை ஏற்படுத்தியிருக்கிறது. பெரும்பாலானோர் போர் நடக்கும்போது அரசுக்கு எதிராக எழுதக் கூடாது என்று நினைக்கிறார்கள். இப்போது அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஓர் ஊடகவியலாளர் அரசு கருத்துச் சுதந்திரத்தில் நுழைய நினைத்தால் கூட கைது செய்யப்படலாம்.

எந்தத் துறையும் அதில் பணிபுரிபவர்கள் தங்கள் பணியின் பொருட்டு உயிரை விட வேண்டும் என்று எதிர் பார்ப்பதில்லை - ஆயுதப் படைகளையும் இலங்கையில் ஊடகத் துறையையும் தவிர. கடந்த சில வருடங்களாக சுதந்திரமான ஊடகத் துறை தொடர்ந்து தாக்குதல்களுக்கு உள்ளாகிவருகிறது. பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் கொளுத்தப்படுகின்றன, குண்டுவைத்துத் தகர்க்கப்படுகின்றன, சீல்வைத்துப் பூட்டப்படுகின்றன அல்லது அதிகாரத்துக்கு இணங்கும்படி வற்புறுத்தப்படுகின்றன. கணக்கற்ற ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் மிரட்டப்படுகிறார்கள் கொல்லப்படுகிறார்கள்.

இன்னும் பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்ற சுலோகமும் கருத்தியலும் அடிப்படை உரிமைகளை வேரறுக்கிற ஒரு பேராயுதமாக அரசுகள் பலவற்றால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆளுங் கட்சிப் புத்திஜீவிகளும் அரசாங்கத்தின் ஊடகத் துறை அமைச்சர்களும் ஊடகத் துறையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பெருநிதிநிறுவனங்களும் இவற்றை நியாயப்படுத்தி வருகின்றன.

இப்போதைய ஆட்சிக்கு வந்த பிற்பாடும் ஊடகவியல்லாளரதும் ஊடக சுதந்திரத்தினதும் நிலை பல மடங்கு மோசமாகிவிட்டது. இலங்கையின் வானொலி, தொலைக்காட்சி, அச்சு ஊடகங்களில் பெரும்பான்மையானவை அரசக் கட்டுப்பாட்டில் இயங்குபவை. எனினும் தனியார் வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் இயங்கி வந்துள்ளன. போர்ச் செய்திகள், சிறுபான்மை மக்களது உரிமைகள் என்பவற்றைப் பொறுத்தவரை ஆங்கில, சிங்கள மையநீரோட்ட ஊடகங்கள் எல்லாவகையான இலங்கை அரசுகளுக்கும் மிகுந்த விசுவாசமாகவே எப்போதும் தொழிற்பட்டு வந்துள்ளன

பிராந்தியங்களைப் பொறுத்தவரை அதுவும் குறிப்பாக வடக்கு ,கிழக்கு ஊடகவியலாளர்களில் பெரும்பாலானவர்கள் அச்சம் காரணமாக நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்துள்ளனர் இருப்பவர்கள் அச்சுறுத்தலோ,நெருக்கடியோ இல்லாமல் தமது பணியை ஆற்ற முடிவதில்லை சில சந்தர்ப்பங்களில் இந்த பிராந்திய ஊடகவியலாளர்கள் ஊடக அடையாள அட்டையை வைத்திருந்தும் உளவுப் படைகளால் அச்சுறுத்தப்படுகின்றனர்

.ஊழல் மற்றும் மோசடி தொடர்பாக எழுதி வரும் ஊடகவியலாளர்கள் ஊடகவியல் ஒழுக்க விதிகளையும் மீறி செய்தி மற்றும் மூலங்களுக்கான தகவல்களைத் தருமாறு அதிகாரத்தால் அச்சுறுத்தப்படுகிறார்கள் மறுப்பவர்களும் இணங்கிக் கொள்ளாதவர்களும் அரசு சார்ந்த ஊடகங்களால் துரோகிகளாக வர்ணிக்கபடுகின்றார்கள்.




இன்று பெரும்பான்மையான மனித உரிமை அமைப்புக்கள் ஆழ்ந்த நித்திரையில் உள்ளன ஊடகத் துறையிலும் பொதுவாக கவலைக்குரிய அமைதி நிலையே காணப்படுகின்றது. அன்று மனித உரிமைகளை தமது கொடியாக சுமந்து கொண்டு செயற்பட்ட ஊடகத்துறை இன்று அர்த்தமற்ற மௌன நிலையில் ஆழ்ந்துள்ளது. உண்மையானசவால் ஜனநாயக சமூகத்தில் ஒழுக்க விழுமியங்களைக் காப்பாற்றும் உண்மையான சவால் நிலை ஏற்படுவது சமாதான காலத்தில் அல்ல. ஜனநாயகம் அற்ற சக்திகளை சந்திக்கும் போதே உண்மையான சவால் நிலை ஏற்படுகின்றது. இதனால் எந்த நிலையிலும் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள், சித்தரவதைகள், கொலைகள் என்பனவற்றைக் கண்டிப்பதற்கு ஜனநாயக சக்திகளுக்கு உரிமை உண்டு ஆனால் துரதிருஸ்ட வசமாக அவ்வாறான சக்திகள் அரிதாகி விட்டன.

இன்று பெரும்பான்மையான மனித உரிமை அமைப்புக்கள் ஆழ்ந்த நித்திரையில் உள்ளன. ஊடகத் துறையிலும் பொதுவாக கவலைக்குரிய அமைதி நிலையே காணப்படுகின்றது. அன்று மனித உரிமைகளை தமது கொடியாக சுமந்து கொண்டு செயற்பட்ட ஊடகத்துறை இன்று அர்த்தமற்ற மௌன நிலையில் ஆழ்ந்துள்ளது.

இதுவரை காலமும் இலங்கையில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல்போன ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களுள் மிகப் பெரும்பாலானோர் இலங்கை அரசப் படைகளாலும் இலங்கை அரசின் கொலைக் குழுக்களாலும் கொல்லப்பட்டவர்கள்.

20க்கும் மேற்பட்ட அனுபவம் வாய்ந்த ஊடகவியலாளர்கள் அரசியல் தஞ்சம் கோரி வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடு என்ற வரிசையில் முதல் இரண்டு இடங்களிலும் இருப்பவை ஈராக்கும் இலங்கையும்தான். காணாமல் போனோர் எண்ணிக்கையிலும் உலகின் முதலிடத்தில் இரண்டு இடங்களிலும் இருப்பவை இலங்கையும் ஈராக்கும்தான்.

எல்லைகளற்ற செய்தியாளர்கள் (Reporters Sans Frontiers) அமைப்பு ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்ற ஊடக சுதந்திர சுட்டெண் (Press Freedom Index) வரிசையில் 169 நாடுகளில் இலங்கை 153ஆம் இடத்தில் இருக்கிறது. இலங்கையை விட மிக அதிகப்படியான ஊடக சுதந்திரம் சவூதி அரேபியாவிலும் சிம்பாவேயிலும் கிர்க்கிஸ்தானிலும் இருக்கிறது.

ஒரு சிறந்த ஊடகமும், ஊடகவியளலாரும் இந்த நாட்டில் சுதந்திரமாக கருத்துச் சொல்ல முடியவில்லை. ஒரு அச்சம் கொணர்ந்த நிலையில் தான் தனது படைப்புகளை படைத்துக் கொண்டியீருக்கின்றார்கள். அவர்கள் முதுகுக்கு பின்னும் முகத்துக்கு முன்னும் துப்பாக்கிகள் நீட்டிக் கொண்டே அலைந்து திரிகின்றது. எந்த சூழ் நிலையிலும் மரணம் அவர்களை ஆட் கொள்ளலாம்

எந்த நம்பிக்கையும் இல்லாவிட்டாலும் கூட , நம்பிக்கைகளை படைப்பது நமது கடமையாக இருக்க வேண்டும்.

கோ.நாதன்
நன்றி- குளொபல் தமிழச் செய்திகள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

*பயிற்சி 04* *பாடம் - கணிதம்*

1. $\frac{x}{3}=7$ எனின், $x$ இன் பெறுமானம்?
2. 0.66 / 0.33 ஐ சுருக்குக.
3. $\log_2 x = 3$ எனின், $x$ ஐக் காண்க.
4. $800\ cm^3$ எத்தனை ml ஆகும்?
5. $3x+2=y$ ஆகவும், x=2 ஆகவும் தரப்படின் y ஐக் காண்க.
6. $x+2>5$ எனும் சமனிலியை எண்கோட்டில் காட்டுக.
7. $8x^2y$, $4xyz^3$, $2xyz$ என்பதன் பொ.ம.சி ஐ காண்க.
8. 8 மாணவர்களின் இடை புள்ளி 8.3 எனின், 08 மாணவர்களின் மொத்த புள்ளியை காண்க.

09. $59-\{49-(39-29)-19+9\}$ சுருக்குக.

10. $\text{Sin}\,A = 3/5$ எனின், Sin ACosATanA இன் பெறுமானம் காண்க.

11. $a^2-b^2=(a+b)(a-b)$ ஐப் பயன்படுத்தி $103^2-97^2$ பெறுமானம் காண்க.

12. $m^{1/3}\times 5^{1/3}=10$ என்பதை சுருக்கி m ஐக் காண்க.

13. , A:B = 2:3 A:C = 4:1 எனும் விகிதத்தில் பழங்கள் பங்கிடப்பட்டது. c க்கு கிடைத்த பழங்கள் 50 எனின், பங்கிடப்பட்ட மொத்த பழங்கள் எத்தனை?

14. ஒரு கூட்டல் விருத்தியின் கூட்டுத்தொகை Sn=n(n+2) எனின், முதலாம் உறுப்பை காண்க.

15. $y=-(x-5)^2+8$ எனும் சமன்பாட்டின் திரும்பற் புள்ளியை எழுதுக.

16. ரூபா 50000 க்கு விற்கப்பட்ட பொருளுக்கு 5% தரகு கூலி கொடுக்க வேண்டுமெனின், உரிமையாளருக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு?

17. $14cm$ ஆரையுடைய வட்டத்தின் சுற்றளவு, $24cm$ நீளமுடைய செவ்வகத்தின் சுற்றளவுக்கு சமன் எனின், செவ்வகத்தின் அகலத்தை காண்க.

18. 20. $a+\sqrt{\frac{b}{c}}=d$ எனும் சூத்திரத்தில் $c$ ஐ எழுவாயாகத் தருக.

19. $27_{\text{பத்து}}$ என்பதை துவித எண்ணாக தருக.

20. ஒழுங்கான பல்கோணியின் அகக்கோணம் $140^0$ எனின், பக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க.

21. சுருக்குக. $\frac{5}{x-4}+\frac{3}{4-x}+\frac{1}{x-4}$

22. தூரத்தை குறிக்கும் வகையில் அளவிடைப்படம் வரையப்பட்டது எனின், இங்கு பயன்படுத்திய அளவிடையைத் தருக.

23. $A \cap B$ ஐ நிறந் தீட்டிக் காட்டுக.

24. $40Kmh^{-1}$ என்ற சீரான கதியில் செல்லும் மோட்டார் சைக்கிள் 30 நிமிடங்களில் செல்லும் தூரம் எவ்வளவு?

25. கிறீன்விச் கோட்டில் உள்ள நகரம் $A$ ஆகும். அக்கோட்டிற்கு கிழக்கு திசையில் $30^0$ நெடுங்கோட்டில் அமைந்துள்ள நகரம் $B$ ஆகும்.
    1. இரு நகரங்களுக்கும் இடையிலான நேர வித்தியாசம் எவ்வளவு?
    2. Aயில் நேரம் 0600 h ஆக இருக்கும்போது $B$ யில் நேரம் எவ்வளவு?

26. a=3 , $x=-2$ எனின், $a^2-x$ இன் பெறுமானத்தைக் காண்க.

27. பொருளொன்று ரூபா 270 இற்கு விற்கப்பட்ட போது 10% நட்டம் ஏற்பட்டது எனின், பொருளின் கொள்விலை யாது?

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் **T. குமணன்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 04

1. வீட்டுத் தோட்டமொன்றில் ஒரு பயிரை நடுதல் தொடர்பான தகவல்கள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன.
   அ. தினமும் பாத்திகளுக்கு நீரூற்றல்
   ஆ. நிலத்தை உழுது பண்படுத்தல்
   இ. வித்துக்கள் முளைத்து நன்றாக வளருதல்
   ஈ. பாத்திகளை தயார்படுத்தல்.
   உ. வித்துக்களை பாத்திகளில் நடுதல்
   இதனை ஒழுங்கு வரிசைப்படி காட்டுவது எது?
   1. ஆ,ஈ,இ,அ,உ 2. ஆ,ஈ,உ,அ,இ 3. ஈ,ஆ,இ,உ,அ
2. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலை அல்லாதது எது?
   1. ஈரப்பலா 2. மரவள்ளி 3. அகத்தி
3. சிறிய தாவரமொன்றை சிரட்டையினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தால் தாவரத்தின் இலை வெளிறி மஞ்சள் நிறமடையும். இதற்கு காரணமாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
   1. பச்சையம் உற்பத்தி செய்யப்படாமை 2. மஞ்சயம் உற்பத்தி செய்யப்படுதல் 3. சூரிய ஒளி கிடைக்காமை
4. நீரில் மிதக்கக்கூடிய பொருள் எது?
   1. தக்கை 2. சீனி 3. உப்பு
5. பின்வரும் வாக்கியங்களை கருத்துமிக்கதாக ஒழுங்குபடுத்திக் கூறுவது?
   அ. அப்பா பரிசு வாங்கித் தந்தார்.
   ஆ. பரீட்சைக்குத் தோற்றினேன்.
   இ. விடாமுயற்சி வெற்றி தரும் என ஆசிரியர்கள் பாராட்டினர்.
   ஈ. மிகவும் கடினமாகப் படித்தேன்.
   உ. பரீட்சையில் அதியுயர் சித்தியெய்தினேன்.
   1. அஇஉஈஆ 2. ஈஆஉஅஆ 3. ஈஆஉஆஅ
6. கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
   1. 5 பேர் 2. 6 பேர் 3. 7 பேர்
7. 19 3 8 15 15 12 எனும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய ஆங்கிலச் சொல் எது?
   1. school 2. spoon 3. front
8. நிமலனின் வீட்டிற்கும் மக்கள் வங்கிக்கும் இடையிலான தூரம் 1500மீ ஆகும். இத்தூரத்தில் 2/5 பகுதியை நடந்தும், மீதித் தூரத்தை சைக்கிளிலும் சென்றான். எனில் அவன் நடந்து, சைக்கிளில் சென்ற தூரங்கள் முறையே?
   1. 300மீ, 900மீ 2. 600மீ, 900மீ 3. 900மீ, 600மீ
9. "மாம்பட்டை மருதம்பட்டை வெளவாலோடிய தென்னம் பட்டை......" என்ற கிராமிய பாடலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?
   1. சடுகுடு 2. கிட்டிப்புள் 3. கபடி
10. ஒருவருக்கு ஒரு குளவி கொட்டினால் செய்யக் கூடிய முதலுதவி எது?
    1. கொடுக்கை அகற்றிய பின் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
    2. கைமருந்தை காயத்தின் மீது பூசுதல்
    3. கொடுக்கை அகற்றிய பின் கைமருந்தை பூசுதல்
11. இலக்கம் 2, இலக்கம் 4 எழுதப்பட்ட எண் அட்டைகள் ஒரு பெட்டியினுள் இருந்தன. எண் அட்டைகளிலுள்ள எண்களின் கூட்டுத்தொகை 36 ஆகும். எண் அட்டைகளை எண்ணிய போது 12 இருந்தன. இதில் இலக்கம் 2, இலக்கம் 4 கொண்ட அட்டைகளின் எண்ணிக்கைகள் முறையே
    1. 5, 7 2. 7, 5 3. 6, 6
12. அசேதனப் பசளை அல்லாதது
    1. யூரியா 2. அமோனியா 3. கூட்டெரு
13. "எப்பாடு பட்டும் செல்வத்தை சேர்" என்ற கூற்றுக்கு பொருத்தமான பழமொழி யாது?
    1. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
    2. நனைந்தவனுக்கு கூதல் என்ன குளிர் என்ன?
    3. திரை கடலோடியும் திரவியம் தேடு
14. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" எனற் பழமொழியின் சரியான கருத்து யா?
    1. மனம் விரும்பினால் யாருக்கும் உதவலாம்.
    2. மனநிறைவே சிறந்த செல்வமாகும் 3. மனத்திருப்தி
15. "பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல" என்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி எது?
    1. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் காந்தனுக்கு தந்தை புத்தகம் சிலவற்றை பரிசாகக் கொடுத்தல்.
    2. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் பாலனுக்கு பந்தொன்று பரிசாகக் கிடைத்தல்
    3. எப்போதும் விளையாட்டில் ஈடுபடும் மாலதிக்கு தொலைக்காட்சி பார்ப்பதற்கு தடை விதித்தல்.
16. பின்வருவனவற்றுள் இரட்டைக் கிளவி அல்லாதது எது?
    1. கலீர்கலீர் 2. விழுந்துருண்டு 3. சுள்சுள்
17. 'ஐ' எனும் ஓரெழுத்துச் சொல்லுக்கான பொருள் அல்லாதது?
    1. மேன்மை 2. அழகு 3. மென்மை
18. செங்கோணத்திலும் பெரியதைக் காட்டும் நேரம் எது?
    1. 3 மணி 2. 6.30 மணி 3. 9.10 மணி

புலமைப் பரிசில் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் **திரு. ந. மனோகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுவலை .....

தடைசெய்யப்பட்ட தொழிலாயின் மாற்று தொழிலுக்கான நடவடிக்கையை உரிய அமைச்சும் திணைக்களமும் மேற்கொள்ளவேண்டும். புல்மோட்டை மீனவர்களுக்கு மாத்திரம் மீன்பிடி திணைக்களம் சட்டத்தை அமுல் படுத்தகூடாது" என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பில் புல்மோட்டை சிறுகடல் தொழிலாளர் அபிவிருத்தி மத்திய கூட்டுறவு சங்கத்தின் தலைவர் இஸ்மாயில் சஹுப்தீன் கருத்து தெரிவிக்கும் போது

"இவ்வாறான தடை உத்தரவு சட்டங்கள் ஏழை மீனவர்கள் மத்தியிலேயே பிரயோகிக்கப்படுகின்றன. இதனால், மீனவர்கள் அடிக்கடி கைதுசெய்யப்படுவதுடன் அவர்களுடைய உடமைகள் அரச உடமைகளாக்கப்படுகின்றன. கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மேற்கொண்டு வரும் இத்தொழில் முறைமைக்கு தற்போது தடைவிதிப்பது திட்டமிட்ட சதி" என தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்றே தாம் கட்டளை இட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில்....

ஒரு மாணவரின் கல்வி

முன்னேற்றத்தில் எந்த தடையும் இருக்கக்கூடாது. ஒரு மாணவரின் முன்னேற்றத்தில் மாணவர் பின்தங்கியிருந்தால் அதற்கு காரணம் அதிபரும், ஆசிரியரும் தான். அதற்கு அவர்கள்தான்.....

பொறுப்புக் கூறவேண்டும். மாணவர்களை வகுப்புக்களில் சித்தியடையாமல் செய்வதும் அவர்களின் முன்னேற்றத்தை தடுக்கக்கூடாது என கல்விக் கொள்கையில் சொல்லப்பட்டுள்ளது.

கல்விக் கொள்கையின் சட்டம் இவ்வாறிருக்க அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களை சித்தியடையச் செய்யாமல் விடுகின்றார்கள். இது தொடர்பில் யாராவது நீதிமன்றம் சென்றால் நீதிமன்ற தீர்ப்புக்கள் கல்விக் கொள்கைக்குச் சார்பாகவே இருக்கும்.

இது சம்பந்தமாக என்னிடத்தில் வந்தால் கூட நான் மிக கடுமையான நடவடிக்கை எடுப்பேன். மாணவர்களை சித்தியடையச் செய்யாமல் அவர்களின் முன்னேற்றத்தை தடுக்கும் வகையில் கல்விக் கொள்கைக்கு எதிராக இயங்கினால் அதிபர் ஆசிரியர்கள் சேவையியிலிருந்து நீங்கிப்போக வேண்டிய நிலையும் ஏற்படும்" என்றார்.

## தமிழரசுக் கட்சியி...

.நடக்காதிருத்தலைக் குறிக்கலாம். இந்நிலையானது மத்திய அரசானது வடக்கு மக்களால் வழங்கப்பட்ட ஆணையைச் சட்டைசெய்யாதிருப்பதைக் காட்டுவதுடன் மத்திய அரசானது அதிகாரப் பகிர்வை மாகாண சபைக்கு வழங்கும் எண்ணமற்றிருப்பதையும் காட்டுகின்றது.

இவற்றால் உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அரசே முட்டுக்கட்டையாக உள்ளது.

வடக்கு கிழக்கில் மக்கள் பரம்பலைச் சிதைப்பதையும், அம் மக்களின் மொழி, பண்பாட்டு அடையாளங்களை மருவச்செய்வதையும் குறிக்கோளாகக்கொண்டு அரசு சில நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. இலங்கை அரசு மேலும் நேரம் தேவை என்று கூறும் போதெல்லாம் மேற்கூறிய நடவடிக்கைகளை வேகமாகவும் பெருமெடுப்பிலும் முன்னெடுக்கவே அக்காலத்தைப் பயன்படுத்த முனைகின்றது. எனவே அரசு உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பினால் ஆகக் குறைந்தது மேற்கூறப்பட்ட மிகவும் அடிப்படையான விடயங்களிலாவது தீர்வுகளை உருவாக்க வேகமாக முனைவதன் ஊடாகவே மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களிற்கு நிவாரணத்தை வழங்க முடியும் என தமிழரசுக் கட்சி தனது தீர்மானத்தை வெளியிட்டுள்ளது. (ஆங்கிலத்தில் - கொழும்பு டெலிகிராப் - தமிழில் - மாயன்)

# சனாதிபதியைச் சிக்கவைக்க முயற்சி

போர்க் குற்றங்களைக் கோர்த்து அவ்வலையினுள் சனாதிபதி மகிந்த ராசபக்சவை விழுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



அதன் முதற் கட்டமாக ஜெனீவாவிப் எதிர்வரும் மார்ச் மாதம் பிரேரணையொன்றை முன்வைத்து, அதன் ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் சனாதிபதியை நிறுத்தும் சதியே அது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சம்பூரில்....

கிழக்கில் உருவாக்கும் மின்வலுத்திட்டத்தின் ஊடாகசெலவுச் சிக்கனம் கொண்ட மின்வலுவை பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் வழங்கும் சாத்தியப்பாடுகளை இரு நாடுகளும் ஆராய்வதாக இந்தியத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. இலங்கையின் வலுத்துறையில் சீனா ஏற்கனவே ஏறத்தாள 1.3 பில்லியன் முதலீட்டினை மேற்கொண்டுள்ளதுடன் உட்கட்டுமான அபிவிருத்தியில் பெரும் பங்கினையும் சீனா தனதாக்கிக் கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## செயற்பாட்டு அபிவி....

வழங்கப்படவில்லை என்பதுடன் இலங்கையின் பாதீட்டில் முன்மொழியப்பட்ட கிராமிய மற்றும் பிரதேச பொருளாதார விருத்தி சம்பந்தமான உரையாடலுக்கும் அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான தெளிவுபடுத்தும் கூட்டத்திற்கும் தமிழத் தரப்பினர் அழைக்கப்படவில்லை.

ஆளுங்கட்சியின் அங்கத்தவர்களை மட்டுமே கலந்து கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட அரச அதிபரால் ஒப்பமிடப்பட்ட கடிதத்தின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததாக தெரிகின்றது.

இவ்விடயம் தொடர்பாக தமிழக்கட்சியின் அங்கத்தவர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவிக்கும் போது கிராமிய மட்டத்தில் தமிழ் மக்களுக்குள்ள பிரச்சனைகளைப் பற்றி அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட எங்களுக்குத்தான் மிகத் தெளிவாகத் தெரியும். நாங்கள் இவ்வாறான அபிவிருத்திக் கூட்டங்கிளற் கலந்து கொண்டால் மட்டுமே அப் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்து மக்களிற்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும். ஆனால் எம்மைத் தவிர்த்து விட்டு எமது தமிழப் பகுதிகளில் அபிவிருத்தியை எவ்வாறு சரியாக இனங்கண்டு முன்னெடுக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பினார்.

## நூறு ரூபா..

மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குப் போதும்ான நிதி தன்னிடம் இல்லை எனத் தெரிவித்துள்ள உதய கம்மன்பில தனது ஆதரவாளர்கள் அனைவரையும் தலைக்கு நூறு ரூபா தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## மட்டு மாநகரசபைக்கு...

நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம்" "மட்டக்களப்பு மாநகர சபை பிரிவிலுள்ள....

பாதையோரங்களில் வியாபாரம் செய்யும் வீதியோர வியாபாரிகளை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான மாற்று ஒழுங்குகளும் செய்து கொடுக்க ஆலோசித்து வருகின்றோம். மட்டக்களப்பு மாநகர சபை பிரிவில் காணப்படும் கட்டாக்காலி மாடுகளை தெருக்கலில் மேய விடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. மட் மாநகர சபைக்கு சகல வரிகளுமாக 117 மில்லியன் 'ரூபா வரவேண்டியுள்ளது. இந்த நிலுவையில் கடந்த ஆண்டு மாத்திரம் 29.6 மில்லியன் 'ரூபா வரி வரவேண்டியுள்ளது. இதில் சோலை. வரி, மற்றும் குத்தகை, வருமான வரிகளாகும்.

இந்த நிலுவையாக உள்ள வரியினை இந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்குள் செலுத்துபவர்களுக்கு 10 வீத கழிவும், டிசம்பவர் வரை செலுத்துபவர்களுக்கு 5 வீத கழிவும், சலுகையாக வழங்கப்படுவதுடன் அடுத்த ஆண்டுக்குள் செலுத்தி முடிக்க தவறுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று அவர் கூறினார்.

## தமிழ்த் தேசியக்....

நாம் ஒரு போராட்டத்தை மாகாணசபை கட்டிட முன்றலில் அரங்கேற்றினோம் என த.தே.கூவின் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் இரா. துரைரெத்தினம் முன் வைத்த கிழக்கு மாகாண அரசு பணியாளர் நியமனம் குறித்த அவசர பிரேரணையொன்றை விவாதிப்பது தொடர்பாக எழுந்த சர்ச்சை காரணமாகவே மாகாண சபை காலவரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் முகாமைத்துவ உதவியாளர் தரம் இரண்டிக்கான நியமனங்களை வழங்கும் வகையில் போட்டிப்பரிட்சைகள் நடத்தப்பட்டு நேர்முகத்தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

170 பேர் இந்த நியமனத்தில் இணைக்கப்படவுள்ளனர். ஆனால் இவற்றில் 115 பேர் முஸ்லிம்களாகவும் 40 பேர் சிங்களவர்களாகவும் உள்ள நிலையில் 15பேர் மட்டுமே தமிழர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில் தமிழர்களுக்கான நியமனங்கள் புறந்தளப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினால் இன்று அவசர பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்படவிருந்தது. எனினும் கட்சி தலைவர்களின் கூட்டத்தின் தீர்மானத்தின் படியே பிரேரணை கொண்டுவரலாம் எனவும் பிரேரணைகள் 10 தினங்களுக்கு முன்னர் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவசர பிரேரணைகளை உடனடியாக கொண்டுவர வேண்டிய தேவைப்பாடு மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டு என தமிழ் தேசிய கூட்டமைபு மாகாண சபை உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைய மாகாண சபை அமர்வுகளை கூட்டிய பின்னர் ஒத்திவைத்து கட்சி தலைவர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடுவோம் என தவிசாளரினால் கூறப்பட்டது.

இதனை தொடர்ந்து சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தபோதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரேரணையை எதிர்த்து பின் வரிசையில் இருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபையினை விட்டு வெளியேறினர்.

தேனீர் இடைவேளைக்குப்பின் சபை மீண்டும் கூடுவதற்கான மணி ஒலிக்கப்பட்டபோது சபை அமர்வுகளுக்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் மட்டுமே வருகை தந்தனர். ஆனால் அவ் வேளையில் ஆளும்கட்சி உறுப்பினர்களின் கூட்டமும் நடந்துள்ளது.

அவ்வாழும் கட்சிக் கூட்டம் நிறைவுற்றதன் பின்னர் சபைக்கு வருகை தந்த தவிசாளர் எந்தவித காரணமும் தெரிவிக்காமல் சபையின் கூட்டத்தினை காலவரையின்றி ஒத்திவைத்துள்ளார். இதனை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர் எனத் தெரிகின்றது.

சபையை மீண்டும் கூட்டுவதற்கு தேவையான குறைந்த பட்ச உறுப்பினர்கள் போதாமையால் தனது அதிகாரத்தை பயன்படுத்தி சபையை தான் ஒத்திவைத்ததாக அவைத்தலைவர் ஆரியவதி கலப்பதி தெரிவித்துள்ளார்.

# வருடம் ஒன்று தாண்டியும் மூடப்படாத குழி

நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையால் கிண்டப்பட்ட குழி யொன்று வருடமொன்று ஆகியும் இன்று வரை மூடப்படாமல் இருப்பதாக திருக் கடலூர் மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

நிலாவெளி பிரதான வீதியில் மக்கள் வங்கிப் பிராந்தியக் காரியாலயத்திற்கு முன்பாகவே இக்குழி காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## மனிதன் அல்லாஹ்வுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய ஓர் அமானிதம்

ஆதாரம் (புகாரி முஸ்லிம்) அதாவது அல்லாஹ்வுக்கு விருப்பமானவற்றை மட்டுமே பார்க்கவும் கேட்கவும் செய்கின்றான்.

பாதங்களும் இதற்கு விதிவிலக்கல்ல ஒரு விசுவாசி அவற்றினால்த்தான் தனது முழுமையான செயல்பாடுகளை செய்து முடிக்கிறான். பாதங்களின் நற்கிரிகைகள் மூலம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் அல்லாஹ் விடம் பதியப் படுவதாக நாயகம் அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அன்று பனுஸலாமன என்ற கோத்திரத்தினர் பள்ளி வாயலுக்கு அன்மையில் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொள்ள விரும்பிய போது அதனைத் தடுத்த நபியவர்கள் பள்ளிவாயலை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் அல்லாஹ்விடம் பதியப் படுவதாக அறிவுறுத்தினார்கள்.

மாறாக எவை எல்லாம் மானங் கேடானவையாகவும் தடுக்கப்பட்ட வையாகுவம் உள்ளனவோ அவற்றைப் புரிய இந்த உறுப்புகள் முற்படும் போது அவை தீமையாக பதியப்படுவதோடு அல்லாஹ்வின் அதிருப்தி யையும் ஏற்படுத்துகின்றது.

வணக்கத்தின் யதார்த்த நிலையை அல்லாஹ் கூறுகின்றான். நீர் உம்முடைய முகத்தை மார்க்கத்தின் பால் முற்றிலும் திருப்புவீராக, அல்குர் ஆன் அத்தியாயம் 30லும் வசனம் 30லும் தெளிவாக கூறுகின்றான்.

அல்லாஹ்வுக்காக மட்டும் புரியப்படும் நற்காரியங்களினால் மனிதனின் உள்ளம் தூய்மையும், அழகும், பெறுகின்றது. இதுவே பாவிகள் நயவஞ்சகர்கள் நிலைக்கு முற்றிலும் எதிர் மாறான மாற்றமாக ஒரு விசுவாசிக்கு கிடைக்கும் மகத்தான பேறாகும். உலக ஆசையினாலும் புகழ் மோகத்தினாலும், உலக விடயங்களில் மூழ்கி அக்கறை உள்ளவர்களாக காணப்படுவார்கள். உள்ளத்தின் துாய தன்மையை இழந்தவர்களா இருக்கின்றனர்.

வெளிப் பார்வைக்கு தங்களை நல்லவர்கள் என சீர்ப்படுத்திக் கொள்பவர்கள், உள்ளத்தளவில், மாறுபட்டவர்களாகவும், மார்க விடயங்களை, பின்பற்றாதவர்களாகவும் காணப்படுவதை நாம் அறிகின்றோம்.

அல்லாஹ் இது பற்றிய அல்குர் ஆனிலே கூறுகின்றான். அல்லாஹ்விற்கு இது கோபமூட்டக் கூடியதை இவர்கள் பின் பற்றி அவனுடைய திருப்தியை வெறுத்தும் வந்தனர். என்ற காரணத்தினாலாரும். ஆதலால் அவர்களுடைய செயல்களை அவன் அழித்து விட்டான். அத்தியாயம் 47 வசனம் 28யில் கூறப்பட்டது.

எனவே கௌரவம், பதவிகள், பேராசை போன்ற பற்பல உலக விடயங்கள் மனிதனை ஆட்கொண்டு உள்ளத்தைப் புனிதத் தன்மையில்

தொடரும்....

## தொழுகையும் கடமையும்

**இஸ்லாம் ஐந்து காரியங்கள் மீது நிர்மானிக்கப்பட்டுள்ளது.**

**1- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை, முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதராவார்கள் என்று சாட்சி கூறுவது,**
**2- தொழுகையை நிலை நாட்டுவது**
**3- ரமளான் மாதம் நோன்பு நோற்பது**
**4- ஹஜ் செய்வது**
**5- ஜகாத் கொடுப்பது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

தொழுகையை நிலைநாட்டும்படி அல்லாஹ் சுமார் 80 இடங்களில் அல்குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான். அதில் சில வசனங்களையும் தொழுகையைப் பற்றிய நபி (ஸல்) அவர்களின் பல பொன்மொழிகளில் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் நம் அனைவரையும் ஈருலகிலும் வெற்றிபெறும் தொழுகையாளிகளாக ஆக்கியருள்வானாக!

## இஸ்லாத்தை முறிப்பவை

☐ அல்லாஹ்வுக்காக மட்டுமே நிறைவேற்ற வேண்டிய வணக்க, வழிபாடுகளில் பிறரை இணையாக்குதல்.

☐ இணைவைப்பாளர்களை இறைநிராகரிப்பாளர்கள் என கருதாவிட்டாலோ, அல்லது அவர்களின் நிராகரிப்பை சந்தேகித்தாலோ, அல்லது அவர்களின் மதங்களை சரிகண்டாலோ அவனும் நிராகரித்தவன் ஆகிவிட்டான்.

## முறையான பிரார்த்தனை ஒருபோதும் வீண்போகாது!

நிச்சயமாக உங்கள் இறைவன் நித்திய ஜீவன். கோடையாளன். அவனுடைய அடிமைகளில் யாரேனும் அவனிடம் (எதையேனும் கேட்டு) கையேந்தி விட்டால் அவரை வெறுங்கையாக திருப்பிவிட அவன் வெட்கப் படுகிறான். (**அறிவிப்பவர்**: ஸல்மான் அல்ஃபாரிஸி-ரலி, நூல்: அபூதாவூத், திர்மிதி)

ஒரு முஸ்லிம், பாவச்செயல் மற்றும் இரத்த பந்த உறவுகளை முறிக்காத எந்தப் பிரார்த்தனையை இறைவனிடம் கேட்டாலும் அதற்கு இறைவன் (மூன்றில்) ஏதேனும் ஒரு விதத்தில் பதில் அளிக்கிறான்.

- ♦ அவன் கேட்டதை கொடுத்து விடுகிறான்.
- ♦ மறுமைக்காக அதன் நன்மையை சேர்த்து வைக்கிறான்.
- ♦ பிரார்த்தனையின் அளவு அவனுக்கு ஏற்படும் தீங்கை போக்கிவிடுகிறான்.

என்று நபி(ஸல்) அவர்கள் கூறியபோது ஒரு நபித்தோழர், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களே! நாங்கள் அதிகமாக பிரார்த்தனை செய்யப் போகிறோம் என்றார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், அல்லாஹ்வும் மிக அதிகமாக்குவான் என பதிலளித்தார்கள். (அறிவிப்பவர்: அபூஸயீத் அல்குத்ரீ - ரலி, நூல்: ஹாகிம்)








√.முருங்கை கீரை மிக நல்லது. பப்பாளி பழம், கேரட் போன்றவைகளும் கண்களின் ஆரோக்கியத்திற்கு துணைபுரியும்.

√ சிறிய பாத்திரத்தில் நீரை கொதிக்க வைத்து ஆவி பிடிக்க வேண்டும் வேப்பிலைகள் சிறிது சேர்த்து ஆவி பிடித்தால் மிகவும் நல்லது. பேக் போட கேரட், ஆப்பிள், ஆரஞ்சு, உருளைக்கிழங்கு, தேன், வெள்ளரி, ஸ்ட்ராபெரி, பேரீச்சம் பழம், எலுமிச்சைச்சாறு சிறிதளவு போட்டு அரைமணி நேரம் கழித்து முகம் கழுவ வேண்டும்.

√ தக்காளி, ஆரஞ்சு, கொய்யா, வாழைப்பழம் கலவையைக் கொண்டு மசாஜ் செய்தால் முகம் மிகவும் பளபளப்புடன் இருக்கும்.

√ முதலில் முகத்திற்கு கிளன்சிங் பிறகு மசாஜ், ஸ்கிரப், பேக் ஆகியவற்றை செய்து கொள்ள வேண்டும். கிளன்சிங் செய்ய பாலை உபயோகப்படுத்தி முகம் முழுவதும் பூசி மெதுவாக இரண்டு நிமிடம் மசாஜ் செய்ய வேண்டும்.

√ தேய்த்து பஞ்சினால் துடைக்க வேண்டும். இதனால் தோலினுள் படிந்திருக்கும் அழுக்கு நீங்கிவிடும். மசாஜ் செய்ய தயிரை உபயோகப்படுத்த வேண்டும்.

√ இது சூரியக்கதிர்களின் தாக்குதலால் ஏற்படும் சருமக்கருப்பைப் போக்கும். அதிக சத்தும் சருமத்திற்கு கிடைக்கும். தேனை பயன்படுத்தியும் மசாஜ் செய்யவேண்டும்.

√ மழைக் காலத்தில் மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் குளித்தால் தோலின் நிறம் மாறாமல் இருக்கும். குளிப்பதற்கு முன்பு உடல் முழுவதும் தேங்காய் எண்ணையை தடவிக் கொள்ளவும்.

√ குளிக்கும் நீரில் ஒரு கைப்பிடி அளவு வேப்பிலை போட்டு வைத்திருந்து, சிறிது நேரம் கழித்துக் குளிக்கலாம். பெண்கள் மழை நாட்களில் தவறாமல் மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஏனெனில், கிருமிநாசினியான மஞ்சள் சருமத்தைப் பாதுகாக்கும்.

√ கைகளில், இறந்த செல்களை நீக்க கரகரப்பான கிரீம்கள் (எக்ஸ்போலியன்ட்) தடவி அவற்றை நன்கு தேய்க்க வேண்டும். பின், சிறிது நேரம் கழித்து அவற்றை கழுவியபின், மிதமான ஹேண்ட் வர்' தடவ வேண்டும். அவற்றை மிதமான தண்ணீரால் கழுவ வேண்டும்.

√ பச்சை திராட்சை சாருடன் அரை கரண்டி எலுமிச்சை சாறை சேர்த்து முகத்தில் தடவி மசாஜ் செய்தால் எண்ணெய்த் தன்மை அற்றுப் போகும்.

## மிகச் சிறிய வயதிலே சிறுமிகள் பூப்படைவது ஏன்?

சிவப்பு நிறத்தில் இருக்கும் சிறுமிகளைவிட கருப்பு சிறுமிகள் சீக்கிரமே பருவமடைகின்றனர் என்று அமெரிக்க ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உணவு, பழக்க வழக்கங்கள், சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கும் பருவமடைவதற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மஞ்சள் நீராட்டு விழா ஒவ்வொரு சிறுமியின் வாழ்விலும் மறக்க முடியாத நிகழ்வு. 12 முதல் 14 வயதுக்குள்தான் பெண்கள் பருவமடைந்து வந்தனர். இந்த நிலை மாறி தற்போது 7 அல்லது 8 வயதுக்கு உள்ளாகவே பூப்படைகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தும் உள்ளது. பருவத்தை அடையும் முன்பு சிறுமிகளிடம் ஏற்படும் முதல் மாற்றம் என்ன? மிகச் சிறிய வயதில் சிறுமிகள் ஏன் பூப்படைகின்றனர்? அமெரிக்காவின் மன்ஹாட்டன் நகரில் உள்ள மவுண்ட் சினாய் மருத்துவப் பள்ளி, கலிபோர்னியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த, சின்சினாட்டி குழந்தைகள் மருத்துவமனை ஆகியவை இணைந்து ஒரு ஆய்வு நடத்தின.

ஆய்வுக்காக 6 வயது முதல் 8 வயது வரை உள்ள ஆரோக்கியமான உடல் தகுதி, சரியான உடல் எடை, அதிக பருமன் உள்ளவர்கள், நிற பேதங்கள் உள்ளவர்கள், என பலதரப்பை சேர்ந்த 1,239 சிறுமிகள் எடுத்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டனர்.



சிறுமிகளின் உடல் எடை, அவர்களின் உணவு மற்றும் இதரப் பழக்கங்கள், நிறம், மன அழுத்தம், சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கும் பூப்படைவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

அதிக உடல் எடையால் உடலில் உள்ள கொழுப்பு சத்து செக்ஸ் ஹார்மோன்களை விரைவில் தூண்டி அதிக அளவு சுரக்கச் செய்கின்றன. சிறு வயதிலேயே சிறுமிகள் வயதுக்கு வர இது முக்கிய காரணம். அவர்களது உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள் மார்பக வளர்ச்சியை தூண்டுகின்றன. அதனால், பூப்படையும் முன்பே மார்பகங்கள் வளர்ச்சி பெருகின்றன.

உடலின் நிறத்துக்கும் இதில் முக்கிய பங்கு உள்ளது. சிவப்பு நிறத்தில் உள்ள சிறுமிகள் முன்கூட்டியே பூப்படையும் வாய்ப்பு குறைவு. கருப்பு நிற சிறுமிகள் முன்கூட்டியே பூப்பெய்துகின்றனர். இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். குழந்தைகள் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி குறித்து வெளியாகும் சிறப்பு மருத்துவ இதழில் இந்தத் தகவல்கள் வெளியாகி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சிக்குடியாறில் மீனவர் கட்டிடம் மக்களின் கையில்

தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரட்னவின் 1.3 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின்கீழ் கஞ்சிகுடியாறு கிராமிய மீனவர் சங்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தின் திறப்புவிழா (27) திருக்கோவில் கஞ்சிகுடியாறு மீனவர் அமைப்பின் அலுவலகத்தில் பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றபோது

இவ்விழாவின் அதிதிகளான அமைச்சர் ராஜித சேனாரட்ன, விசேட அதிதி அமைச்சர் சரத் வீரசேகர, பாராளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, சிறப்பு அதிதிகளான மீன்பிடி அமைச்சின் செயலாளர் ஜயந்த சந்திரசோம, மேலதிக செயலாளர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்த்தன, அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.விமலநாதன் ஆகியோரை வரவேற்பதையும்,இந்திய காப் இனத்தைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் ரோகு மற்றும் கட்லா வகை மீன் குஞ்சுகள் கஞ்சிகுடியாறு குளத்தில் அதிதிகளால் விடப்பட்டதையும் படத்தில் காணலாம். (உதயகாந்)





# கவடாப்பிட்டி கிராமத்திற்கு பொதுக் கிணறு

சுவிற்சர்லாந்து நாட்டில் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த இந்துக்களால் நிருவகிக்கப்படும் பொதுத்தொண்டு அமைப்புக்களினால் ஆலையடிவேம்பு கவடாப்பிட்டியில் வாழும் 37 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கியுள்ள குடிநீர்ப் பிரச்சனைக்குத் தீர்வுகாணும்வகையில் அமைக்கப்படவுள்ள பொதுக்கிணற்றுக்கான அடிக்கல்லினை பிரதம அதிதியாக கலந்துகொண்ட பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன் நட்டுவைப்பதினையும், வசதிகுறைந்த மாணவர்களுக்குத் துவிச்சக்கரவண்டிகளை வழங்கிவைப்பதையும் படத்தில் காணலாம். (மட்டு நிருபர்)



# அந்-நூரியாவில் 1ம் வகுப்பு மாணவர் வரவேற்பு

(பஹ்மியூஸுப்)



திருகோணமலை கல்வி வலயத்தின் குச்சவெளி கோட்டத்திற்குறப்பட்ட தி/தி/அந்-நூரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 2014ஆம் ஆண்டிற்கான தரம் 1 மாணவர்களை வரவேற்கும் வைபவம் கடந்த 2014.01.16ஆம் திகதி வியாழக் கிழமை பாடசாலை அதிபர் ஜனாப் எம்.ஐ.சாஜிபு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தரம் 1 மாணவர்களின் பெற்றோர்களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இவ் விழாவில் குச்சவெளி பிரதேச பள்ளிவாசல்களின் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர், திடீர் மரணவிசாரணை அதிகாரி, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உட்பட பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் கலந்து சிறப்பித்தனர். இம்முறை தரம் 1 வகுப்புக்கு 75 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.



# பொதுவைத்தியசாலையின் நிர்வாகம் மாறியது




பல வருடங்களாக எதிர்பார்க்கப்பட்ட மாகாண அரசாங்க கட்டுப்பாட்டில் இருந்து திருகோணமலை பொது வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கையானது கடந்த 13ஆம் திகதி சாத்தியமாகியுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தில் காணப்பட்ட திருகோணமலை பொது வைத்தியசாலை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் தற்போது உள்ளவாங்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு கிடைத்துள்ள எனவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எச்.கே.எம்.எம்.பி.கவிசேகர தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வைத்தியசாலை அபிவிருத்தி குழு மற்றும் வைத்தியசாலை நிர்வாகம் ஆகியன இணைந்து மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளினாலேயே இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த ஒரேயோரு பொது வைத்தியசாலை திருமலை வைத்தியசாலை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நகரசபையால் கைவிடப்பட்ட பொதுக் கழிவறை

திருமலை நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட அன்புவழிபுரம் சந்தைத் தொகுதியிலுள்ள பொதுக் கழிவறை கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. தண்ணி வசதியற்ற நிலையில் காணப்படும் இக் கழிவறைகளால் நோய்கள் பரவும் வாய்ப்பிருப்பதாக அங்கிருப்பவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர். இவ்விடயத்தை சமூக சேவையாளர் திரு.ரி.நவநீதன் உரியவர்களின் கவனத்திற்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியதை அடுத்து 30ம் திகதி நகரசபை உத்தியோகத்தர்கள் சிலர் இக்கழிவறைகளை வந்து பார்த்துவிட்டுச் சென்றிருப்பதாக வர்த்தகர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர். (அனுர-உதய)



# சர்வதேச விருது பெறும் சமுர்த்தி முகாமையாளர்




சர்வதேசரீதியாக நுண்நிதியியல் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் ஆறு மாத கால பயிற்சி நெறியானது கொழும்பில் அமைந்துள்ள இலங்கை அபிவிருத்தி நிறுவகத்தில் டோக்கியோ அபிவிருத்தி கற்கைகள் நிறுவகத்தின் பூரண அனுசரணையுடன் நடைபெற்றது. இப் பயிற்சிநெறியில் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பதினான்கு உத்தியோகத்தர்கள் சித்தியடைந்ததுடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் பங்குபற்றிய மண்முனை வடக்கு திவிநேகும (சமுர்த்தி) மகாசங்க முகாமைத்துவ பணிப்பாளர் கே.கணேசமூர்த்தி சிறப்பு தேர்ச்சி பெற்றதுடன் பயிற்சியினை சிறந்த முறையில் நிறைவு செய்தமைக்கான சான்றிதழினை பெற்றுக்கொண்டதுடன் சர்வதேச ரீதியான சிறப்பு சாதனையாளர் விருதினையும் பெற்றுள்ளார்

(உதயகாந்)

# கட்டுப்பாட்டை இழந்த பொதுப் பேருந்து

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை அக்கரைப்பற்று பிரதான மார்க்கத்தின் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு பிரதான வளைவில் கடந்த 28ம் திகதி அதிகாலை வேளையில் பஸ் வண்டியொன்று கட்டுப்பாட்டினை இழந்து விபத்துக்குள்ளாகிபோது எடுக்கப்பட்ட காட்சிகள். (மட்டு நிருபர்)



# சமாதான நீதிவான்

திருகோணமலையை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல கவிஞரும் எழுத்தாளரும் "மகுடம்" சஞ்சிகையின் ஆசிரியருமான வி.மைக்கல் கொலின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் முன் நிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



இவர் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியின் பழைய மாணவரும், திருகோணமலையிலிருந்து வெளிவந்த "தாகம்" இலக்கிய இதழின் ஆசிரியருமாவார். (கோ.நாதன் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாவூரில் பாரிய ஆடைத் தொழிற்சாலை



அடுத்து வரும் ஆறு மாதங்களுக்குள் ஏறாவூரில் பாரிய ஒரு ஆடைத்தொழிற்சாலை உருவாகிவிடும். அது 50 இயந்திரங்களை கொண்டு வேலைகளைத் துவங்கும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்திலுள்ள ஏராளமான தமிழ்,முஸ்லிம்,சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிட்டும். இதற்கான சகல ஏற்பாடுகளும் முற்றுப்பெற்று விட்டன" என கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, அமைச்சர் நஸீர் அஹமட் கடந்த புதன்கிழமை (29) தெரிவித்தார்.

"இந்த ஆடைத் தொழிற்சாலையை ஆயிரக்கணக்கானோர் ஆடை உற்பத்தித் தொழிலில் ஈடுபடுகின்ற ஒரு உற்பத்தி வேலைக்களமாக மாற்றுவதற்கு உங்களது ஒத்துழைப்புத் தேவை" என்றும் அவர் தெரிவித்தார்.

ஏறாவூரில் தெரிவு செய்யப்பட்ட 10 வறிய குடும்பங்களுக்கு கூரைத் தகடுகளும் வாழ்வாதார உதவிகளும் வழங்கும் நிகழ்வு அமைச்சர் நஸீர் அஹமட்டின் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எம்.எஸ்.அபுல்ஹஸன் தலைமையில் ஏறாவூர் சிறுகைத்தொழில் பேட்டையில் புதன்கிழமை (29) இடம்பெற்றது.

அடுத்து வரும் ஆறு மாதங்களுக்குள் ஏறாவூரில் பாரிய ஒரு ஆடைத்தொழிற்சாலை உருவாகிவிடும். அது 50 இயந்திரங்களை கொண்டு வேலைகளைத் துவங்கும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்திலுள்ள ஏராளமான தமிழ்,முஸ்லிம்,சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிட்டும். இதற்கான சகல ஏற்பாடுகளும் முற்றுப்பெற்று விட்டன" என கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, அமைச்சர் நஸீர் அஹமட் கடந்த புதன்கிழமை (29) தெரிவித்தார்.

"இந்த ஆடைத் தொழிற்சாலையை ஆயிரக்கணக்கானோர் ஆடை உற்பத்தித் தொழிலில் ஈடுபடுகின்ற ஒரு உற்பத்தி வேலைக்களமாக மாற்றுவதற்கு உங்களது ஒத்துழைப்புத் தேவை" என்றும் அவர் தெரிவித்தார்.

ஏறாவூரில் தெரிவு செய்யப்பட்ட 10 வறிய குடும்பங்களுக்கு கூரைத் தகடுகளும் வாழ்வாதார உதவிகளும் வழங்கும் நிகழ்வு அமைச்சர் நஸீர் அஹமட்டின் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எம்.எஸ்.அபுல்ஹஸன் தலைமையில் ஏறாவூர் சிறுகைத்தொழில் பேட்டையில் புதன்கிழமை (29) இடம்பெற்றது.

# உயர் தேசிய திப்புளோமா - வழக்கு பிற்போடப்பட்டது

உயர் தேசிய திப்புளோமாப் பட்டத்தைப் பெற்றும் அரச பணி கிடைக்காத வட மாகாண பட்டதாரிகள் தொடர்ந்த வழக்கானது செப்டெம்பர் 2014வரை பிற்போடப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்களைப் போல வடக்கிலும் தம்மை அரசாங்க சேவைக்குள் உள்ளீர்த்துக்கொள்ள வேண்டும் என 228 பட்டம் பெற்றவர்கள் வழக்கைத் தொடர்ந்திருந்தார்கள். ஏலவே அரசியனால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைவாக அரச சேவைக்கு ஆட்சேர்க்கும் போது உயர் தேசிய திப்புளோமா பட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்திற்குச் சமாகக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பேரில் 2012ம் ஆண்டில் ஏனைய மாகாணங்கள் யாவற்றிலும் திப்புளோமாதாரிகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும்



2016ம் ஆண்டு கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். க.பொ.த உயர் தரத்தில் விஞ்ஞான பிரிவிற்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை எதிர்வரும் காலங்களில் அதிகரிக்கும் அத்துடன், வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழிநுட்ப கல்வியிலும் அதிக மாணவர்கள் ஆர்வம் காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழரசுக் கட்சியின் திருமலைத் தீர்மானங்கள்

கடந்த 26ம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் கூடிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியன் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இக் கூட்டமானது மத்திய செயற்குழு அங்கத்தவர்களை மட்டும் உள்ளடக்கி காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6.30 மணிவரை நடைபெற்றது.

தீர்மானங்கள் வருமாறு:

1. நிலப் பிரச்சனை - மீளக் குடியமர்த்தப்படாத வலிகாமம் மற்றும் சம்பூர் மக்களின் பிரச்சனைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. அத்துடன் வடக்கிலும் கிழக்கிலும் இராணுவப் பிரசன்னத்திற்காக கைப்பற்றப்பட்டுள்ள வாழ்விடங்களை இழந்த மக்களின் துயரம் தொடர்கின்றது.
2. ஆயிரக்கணக்கான காணாமற் போனவர்களின் நிலைமையைக் கண்டறிந்து அவர்களின் குடும்பங்களிற்கோ பதிலளிப்பது தொடர்பாக உண்மைத்தன்மையுடனோ, வினைத்திறன் வாய்ந்த வகையிலோ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.
3. விசேடமாக வடக்கில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் பிரசன்னத்தால் வாழ்வுச்சிக்கலை மக்கள் அனுபவிக்கின்றார்கள். பொது நிர்வாகத்தில் இராணுவத்தலையீடானது சுயநிர்ணயத்துடனும், தன்மானத்துடனும் வாழும் மக்களின் வாழ்வைக் கேள்விக்குறியாக்குவதுடன் வாழ்வாதாரமும், பெண்களின் அன்றாட நடவடிக்கைகளும்பெரும் சிக்கலை எதிர்கொள்கின்றன.
4. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களைச் சட்டைசெய்யாததால் கொல்லப்பட்ட 40,000ற்கும் மேற்பட்ட மக்களின் கொலை தொடர்பாக பக்கச்சார்பற்ற சுதந்திரமான விசாரணையைச் செய்ய மறுப்பதால் உண்மையான நல்லிணக்கம் தோல்வியடைகின்றது. இத்தோல்வி சர்வதேச விசாரணையொன்றை கொண்டுவரும் சாத்தியமொன்றை ஏற்படுத்தியுள்ளது.
5. ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் தீர்வொன்றை வழங்குவோம் என அரசு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு அளித்த உத்தரவாதங்கள் உட்பட ஏனைய உத்தரவாதங்கள் எவற்றையும் நிறைவேற்றத் தவறியுள்ளதுடன் தன்னிச்சையாக இருதரப்புப் பேச்சுக்களிலிருந்து விலகியதுடன், 13வது திருத்தத்தின் படியான அதிகாரங்களை வழங்குவோம் என சர்வதேசத்திற்கு விசேடமாக இந்தியாவிற்கு வழங்கிய உறுதியை திசைதிருப்பும் நோக்கோடு அரச அங்கத்தவர்கள் மட்டும் அங்கம் வகிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை உருவாக்கி பொறுப்பிலிருந்து தப்பிக்கொள்ளும் முயற்சிணை அரசு மேற்கொண்டுள்ளது. அத்துடன் அரசினால் தெரிவுக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் பலர் வெளிப்படையாகவே அதிகாரங்களை பகிரும் ஏற்பாடுகள் திருத்தப்பட, அல்லது நீக்கப்பட வேண்டும் எனக் கருத்தறிவித்து வருகின்றனர்.
6. வடமாகாணசபையானது நான்கு மாதங்களைக் கடந்துள்ள போதும் அதன் வினைத்திறன் வாய்ந்த செயற்பாட்டிற்குத் தேவையான எதனையும் மத்திய அரசு வழங்காதிருக்கின்றது. அதனுள் ஒன்றாக மாகாண சபைக்குரிய சட்ட ஏற்பாடுகளை மதித்து ...

11

# மட்டு மாநகரசபைக்கு வரவேண்டிய வரிவரவு 117 மில்லியன்கள்

(வரதன்)



மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளராக பொறுப்பேற்றுள்ள எம்.உதயகுமார் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றைக் கூட்டியிருந்தார். மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த ஆணையாளர், மட். பாடசாலை மாணவர்கள் மெய்வல்லுனர் போட்டிகளை நடாத்துவதற்கும், விளையாட்டு பயிற்சிகளை மாநகர சபையின் பின்னாலுள்ள காணியினை கிறவலிட்டு அதை புனரமைத்து மாணவர்களுக்கு தற்காலிகமாக விளையாட்டு பயிற்சிகளை மேற்கொள்ள வழிசெய்து கொடுப்பதற்கான.........

13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org